R. R. NO. 1552/53/78

# வாட்போக்கிக்கலம்பகம்

★

145

O-,17mmE,V
N76
4608

மகாமகோபாத்தியாய
வே. சாமிநாதையர் நூல் நிலையம்
ருவான்மியூர், சென்னை-41.

R.R-NO.1552/35/78

உ

# வாட்போக்கிக்கலம்பகம்

(அரும்பதவுரையுடன்)

4928

★

ஆசிரியர் :

மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்

★

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்

திருவான்மியூர்

முதற்பதிப்பு—1976—1000 பிரதிகள்

© டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்,
திருவான்மியூர்.

O-,17MME,V
N76

TAMIL NADU ARCHIVES LIBRARY
4678
16 FEB 1979
EGMORE, MADRAS

விலை ரூ. 3/-

TAMIL NADU ARCHIVES LIBRARY
4678
EGMORE, MADRAS

*Printed at* :
The City Printing Works,
Madras, 600 014.

உ

சிவமயம்

# முன்னுரை

" நாடிவந்து நமன்தமர் நல்லிருள்
கூடிவந்து குமைப்பதன் முன்னமே
ஆடல்பாடல் உகந்தவாட் போக்கியை
வாடியேத்த நம்வாட்டம் தவிருமே "

—அப்பர் தேவாரம்

தமிழில் உள்ள பிரபந்தங்களை 96 என்று ஒருவகையில் கணக்கிட்டுச் சொன்னாலும் அந்தக் கணக்கில் அடங்காமல் பல பிரபந்தங்கள் உள்ளன. அந்தாதி என்ற பிரபந்தம் முதல் பாட்டின் அந்தத்திலுள்ள அசையோ, சீரோ, சொல்லோ, தொடரோ அடுத்த பாட்டின் ஆதியாக அமையவும், இறுதிப் பாட்டின் இறுதியும் முதற்பாட்டின் முதலும் அந்தாதியாக மண்டலித்து வரவும் பாடப்பெறுவது. இரட்டை மணிமாலை முதலிய வேறு பிரபந்தங்களிலும் இந்த அந்தாதி முறை இருக்கும். அப்படி உள்ள பிரபந்தங்களில் ஒன்று கலம்பகம்.

கலம்பகம் என்பதற்குப் பல வேறு பொருள்கள் என்று சொல்வார்கள். கலம்பகமாலை என்ற ஒன்று உண்டு. பல வகை மலர்களும் கலந்து அமைந்தது அது. "களி வண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த, அலங்கலந் தொடையல்" (திவ்யப் பிரபந்தம், திருப்பள்ளியெழுச்சி, 5) என்ற பாடற் பகுதியும், 'பல பூக்கள் கலந்து நெருங்கிய கலம்பகமாகிய மாலை (பெரும் பாண். 174, ந.) என்ற நச்சினார்க்கினியர் உரைப் பகுதியும் இந்த மாலையைப் பற்றிச் சொல்லும். பலவகை மலர்களைத் தொடுத்துக் கட்டிய மாலையைக் கதம்பம் என்று சொல்லும் வழக்கு இப்போது இருக்கிறது. கதம்பம் என்பதும் கலம்பகம் என்பதும் ஒன்றையே குறிப்பவை என்று தோன்றுகிறது. பல வகை மலர்களை இணைத்துக் கட்டியது போலப் பலவகைச் செய்யுட்களையும் அகம், புறம் என்னும் பொருட்பகுதிகளில் உள்ள பலவகைத் துறைகளையும் அமைத்துப் பாடுவது கலம்பகம்.

வாட்போக்கிக் கலம்பகம் என்பது சோழ நாட்டில் காவிரிக்குத் தென்கரையிலுள்ள வாட்போக்கி என்னும் தலத்தைச் சிறப்பித்துத் திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடியது. பிள்ளையவர்கள் இயற்றிய கலம்பகங்களில் இது முதலாவதாகும். அப்புலவர் பெருமான் ஒருமுறை வாட்போக்கிக்கு இறைவனைத் தரிசனம் செய்யும் பொருட்டுச் சென்றுர். தரிசனம் செய்தபோது அத் தலத்தின் அடியவர்களாகிய பன்னிரண்டாம் செட்டிமார்கள் அந்தக் கவிஞர் வந்ததை அறிந்து அவர்வாயிலாக அத் தலத்துக்கு ஒரு பிரபந்தத்தை இயற்றுவிக்க வேண்டும் என்று எண்ணினுர்கள். தம் விருப்பத்தை அக்கவிஞரிடம் தெரிவிக்க அவர் இசைந்து கலம்பகம் பாடுவதாக ஒப்புக் கொண்டார். அப்படியே அவர் திரிசிரபுரத்துக்கு வந்து கலம்பகலத்தைப் பாடி முடித்தார். அவர் சொல்ல இந்நூலைப் பிள்ளையவர்களின் மாணுக்கராகிய வித்துவான் தியாகராச செட்டியார் எழுதினுர்.[1]

வாட்போக்கி என்பது திருநாவுக்கரசராற் பாடப் பெற்ற தலம். இதை இப்போது இரத்தினகிரி என்று வழங்குவர். இதற்குச் சிவாயமலை, இரத்திநுசலம், ஐயர்மலை, மணிகிரி முதலிய வேறு பெயர்களும் உண்டு. இதைச் சார்ந்த பகுதிகளில் உள்ளவர்கள் இரத்தினம் என்று முடியும் பெயர்களை வைத்துக் கொள்ளும் வழக்கம் இருக்கிறது. இராசரத்தினம், இரங்கரத்தினம், சேதுரத்தினம், கணேசரத்தினம் என்பன போன்ற பெயர்களை உடையவர்கள் பலர்.

இங்கே எழுந்தருளியுள்ள எம்பெருமானுக்கு இரத்தின கிரீசர், வாட்போக்கி நாதர், இராசலிங்கம், முடித்தழும்பர், மலைக் கொழுந்தர், சொக்கர் முதலிய திருநாமங்கள் வழங்கும். அம்பிகைக்குச் சுரும்பார் குழலி என்று பெயர். கல்வெட்டுக்களில் திருமாணிக்கமலை உடைய நாயனுர், திருமாணிக்கமலை மகாதேவர் என்னும் திருநாமங்களும் அம்மைக்கு ஹரலட்சேசுவரி என்ற திருநாமமும் காணப்படுகிறது.

---

1. ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்—முதற் பாகம், ப. 138-40, பார்க்க.

கடம்பர் கோயில், திருஈங்கோய்மலை, இரத்தினகிரி என்னும் மூன்று தலங்களையும் ஒரே நாளில் தரிசனம் செய்வது மரபு. "காலைக்கடம்பர், மத்தியான்னச் சொக்கர், அந்தித் திரு வெங்கி நாதர்" என்று வழங்கும் பழமொழியில் இந்த வழக்கம் சொல்லப்பட்டுள்ளது. சொக்கர் என்றது வாட்போக்கிநாதரை.

ஒவ்வொரு நாளும் காவிரியாற்றிலிருந்து நீர் கொணர்ந்து இங்கே இறைவனுக்குத் திருமஞ்சனம் செய்கிறார்கள். இம் மலையைச் சுற்றி ஒன்பது தீர்த்தங்கள் உள்ளன.

ஆரிய மன்னன் ஒருவன் தன் முடியை இழந்து இறைவன் கட்டளையின்படி அதைப் பெற இங்கே வந்தான். ஒரு கொப்பரை நிறைய நீர் நிரப்பும்படி இறைவன் ஒரு வேதிய வடிவில் எழுந்தருளிச் சொன்னார். அரசன் அவ்வாறு நிரப்ப நிரப்ப அது நிறையவில்லை. அதனால் கோபங்கொண்ட ஆரிய அரசன் தன் வாளால் அவ்வேதியன் தலையில் வெட்ட அவன் மறைந்தான். ஆரிய அரசன் வெட்டிய வெட்டுச் சிவலிங்கப் பெருமான் திருமுடியில் அமைந்தது. அதனால் அப்பெரு மானுக்கு முடித்தழும்பர் என்ற திருநாமம் உண்டாயிற்று. அரசன் வழிபட்டமையால் இராசலிங்கர் என்ற திருப்பெயர் அமைந்தது. அரசன் வாளைப்போக்கித் தழும்புபடச் செய்த மையால் வாட்போக்கி என்ற பெயர் இத்தலத்துக்கு உண்டா யிற்று.

ஆரிய மன்னருடைய பரம்பரையினராகத் தம்மைச் சொல்லிக் கொள்ளும் ஆரியப் பண்டாரம் என்னும் வகுப்பினர் இராசலிங்கருக்குக் காவிரியிலிருந்து அபிடேக நீர் கொண்டு வந்து தருகின்றனர்.

வைரப்பெருமாள் என்ற ஆயர்குலப் பக்தர் ஒருவர் தம் பிரார்த்தனை நிறைவேறியதற்காக இங்கே தம் தலையை அரிந்து பலி கொடுத்தார். அவரை இங்கே காவல் தெய்வமாக வைத்துப் போற்றுகிறார்கள். அவரே இந்த மலையைப் பாது காத்து வருவதாக நம்புவர். அவருடைய உருவச்சிலை சுவாமி சந்நிதியிலும் அடிவாரத்திலும் இருக்கிறது.

இறைவனுடைய அபிடேகத்துக்காகக் கொண்டு வந்த பாற்குடத்தை ஒரு காகம் கவிழ்த்துவிட்டது. அக்காகம் இறைவன் ஆணையால் எரிந்தது. அது முதல் இந்த மலையின் உச்சியில் காகம் பறப்பதில்லையாம். 'காகம் அணுகா மலை' என்ற பெயர் இதற்கு உண்டாயிற்று. இங்கே அபிடேக நீரைப் பூசிக்கும் குடங்களில் காகத்தின் வடிவம் பொறிக்கப் பெற்றிருக்கும். இந்த வரலாற்றை நினைப்பூட்ட இந்த வழக்கம் இருப்பதாகத் தெரியவருகிறது.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இங்கே இடி பூசிப்பதாக ஓர் ஐதிஹ்யம் உண்டு.

ஒருவகைச் செட்டியார்கள் பதினொருவர் இங்கே வந்து பொன்னிடு பாறை என்னும் இடத்தில் தம் ஊதியத்தைப் பங்கிட்டுக் கொண்டார்கள். ஒவ்வொரு முறையும் பன்னிரண்டு பங்காகப் பிரிக்கும்படி ஆயிற்று. பதினொரு பங்குக்குப் பதிலாகப் பன்னிரண்டு பங்கு அமையவே, இறைவன் திருவருள் என்று எண்ணி அந்தப் பங்கை இறைவனுக்கே அளித்தனர். அது முதல் அவர்களுக்குப் பன்னிரண்டாம் செட்டிமார் என்ற பெயர் வழங்கி வருகிறது.

இத்தலத்திற்கு ஒரு புராணமும், உலாவும், தேவாரப் பதிகம் ஒன்றும் உள்ளன. இங்கே வழிபட்டோர் இந்திரன், சூரியன், வீரசேனன், ஆதிசேடன், துர்க்கை, அகத்தியர், சத்தகன்னியர் முதலியோர்.

பிள்ளையவர்கள் இயற்றிய இக்கலம்பகம் சொற்சுவை பொருட்சுவை நிரம்பியது. விநாயகர் துதி, சமயாசாரியர் துதி என்னும் துதிப்பாடல்கள் இரண்டும் மேலே நூறு பாடல்களும் அமைந்தது. சொல்லணி, பொருளணிகள் விரவ அமைந்த இப்பிரபந்தத்தில் தலச்செய்திகளை அங்கங்கே சதுர்பட இணைத்துப் பாடியுள்ளார் அக்கவிஞர் பெருமான்.

தலவரலாறுகளில் உள்ள செய்திகளை வெவ்வேறு வகையில் கற்பனை நயம் பொருந்த எடுத்தாளுவர். ஆரிய அரசன் வெட்டியதை 3, 41, 45, 96 ஆகிய பாடல்களில் குறிப்பிக்கிறார்.

காகத்தை எரித்த வரலாறு 3, 6, 18, 25, 28 ஆகிய பாடல்களில் வருகின்றன. இறைவன் முடித்தழும்பு ஏற்ற வரலாற்றை இணைத்துப் பாடிய பாடல்கள் பல, (3, 8-11, 17, 18, 29, 38-9, 77, 79, 85, 92, 93, 95)

இவ்வாறு பலவகைச் சுவையும் பல சமயக் கருத்துக்களும் தலச்செய்திகளும் மிடைந்து விளங்கும் இந்தக் கலம்பகம் டாக்டர் மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் பதிப்பித்த பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டில் இருக்கிறது.. தனியாகவும் பல ஆண்டுகளுக்கு முன் அன்பர்கள் அச்சிட்டதுண்டு.

இப்போது இது குறிப்புரையுடன் ஐயரவர்கள் நூல் நிலைய வெளியீடாக மலர்கிறது.

இந்தப் பதிப்பை வெளியிட ஒருபகுதி பொருளுதவி செய்தவர்கள் ஸ்ரீ மேல்முகம் பன்னிரண்டார் காலசந்திக் கட்டளையினர். அந்த நிறுவனத்தின் தலைவராகிய திரு. ஆர். பழனிஸ்வாமி செட்டியாரவர்களுக்கும் பிற உறுப்பினர்களுக்கும் எங்களுடைய நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருவான்மியூர்
5—3—1976.

டாக்டர் ஐயரவர்கள் நூல்நிலையத்தார்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# *வாட்போக்கிக்கலம்பகம்

## பாயிரம்

காப்பு

### விநாயகர் துதி

கட்டளைக்கலித்துறை

1. முக்கணொருத்தன்மற் றென்னுள வாரி முயங்குதலான்
மிக்கவெண் கோடொன்று மேசிதை யாநிற்கும் வெள்
உக்க கருமத மேகரு மாசை யொழிக்குமருள் [ளறிவை
புக்கசெம் மேனி மனஞ்செம்மை யாகப் புணர்த்திடுமே.

1. முக்கண் ஒருத்தன் - மூன்று கண்ணையுடைய யானை; விநாயகப்பெருமான். வாரி - யானைகட்டும் இடம்; என் உள வாரி - என்னுடைய உள்ளமாகிய கட்டுத்தறி. ஒற்றைக் கொம்பின் மிக்க வெண்மை வெள்ளறிவின் வெண்மையைச் சிதைத்தது; பேரொளி, சிற்றொளியைச் சிதைத்ததுபோல. வெள்ளறிவு - ஒன்றும் அறியாத அறிவு என்றது அறியாமையை. கருமதம் - கரிய மதநீர்; யானையின் மதம் கருநிறம் உடையது. கருமாசை - பிறவியாகிய குற்றத்தை. கரியமதம் கரிய மாசை ஒழிக்கும் என்றது தொனி. விநாயகருக்குக் கருணையே மதமாதலில் அது பிறப்பை ஒழித்தது; "கருணையென்னும் பெருவெள்ளம் பொழி சித்திவேழத்தை" - திருவிளையாடல். விநாயகருடைய செந்நிறமுடைய மேனி மனம் செம்மையாகும்படிச் செய்யும். விநாயகருடைய நிறம் சிவப்பு என்பதும் மரபு; 'துப்பார் திருமேனித் தும்பிக்கையான்'-ஔவையார். மனம் செம்மையாவது - அஞ்ஞானம் நீங்கி ஞானம் பெறுதல். விநாயகரைத் தியானிப்பதால் அறியாமை நீங்கிப் பிறப்பு அறும் என்பது கருத்து.

*இத்தலம், ரத்நகிரியெனவும், சிவாயமெனவும் இக்காலத்து வழங்கும்.

## சமயாசாரியர் துதி

### கட்டளைக் கலித்துறை

2. சொல்லார் புவியி னெடுமறை யாதித் தொகையுணர்ந்த
வல்லார் மலமொன் றறுமே யடித்தொண்டு வாய்ந்தொளி
நல்லா ரிணக்கத்தி னென்பா ரதுநிற்க நால்வரையும் [ரும்
எல்லா மலமு மறக்கூடு வேனின் பெளிதுறுமே.

---

## நூல்

### ஒருபோகுமயங்கிசைக் கொச்சகக்கலிப்பா

3. தரவு

1. மாமேவு செங்கமல மலருறையுந் திருமகளும்
பூமேவு வெண்கமலப் பொகுட்டுறையுங் கலைமகளும்
பிரியாமே யெஞ்ஞான்றும் பெருநட்புக் கொண்டுறையச்
சரியாமே புகழோங்கத் தழைந்துவளர் சோணாட்டில்
வரைக்கருஞ்சந் தனக்குறடு மால்யானைக் கோடுகளுந்
திரைக்கரத்தி னெடுத்தெறியுஞ் செழும்பொன்னி நதித்
தென்பாற்
தனியவிரும் வாட்போக்கித் தடங்கிரிமேற் பேரருளால்
இனியசுரும் பார்குழலோ டியைந்துறையு மருமருந்தே!

2. குப்பாயங் கொடுப்பவனே கொழுங்கண்மல ரிடுபவனே
செப்பாய முலையுமையாய்த் திகழ்ந்திடப்பா லுறைபவனே

---

2. நெடுமறை ஆதித்தொகை - நீண்ட வேதம் முதலிய நூல்கள். நல்லார் இணக்கத்தினல் ஒருமலம் அறும் என்பர். நால்வரையும் - திருஞானசம்பந்தர் முதலிய நால்வரையும். இன்பு எளிது உறுமே - எளிதில் வீட்டின்பம் கிடைக்கும். நல்லார் இணக்கத்தினல் ஒருமலம் போகும்; நான்கு பேரையும் அடைந்தால் எல்லா மலமும் போகும் என்றபடி.

3. (தரவு) 1. மா - பெருமை. பூ - பொலிவு. வரை கரும் சந்தனக்குறடும் - மலையிலுள்ள பெரிய சந்தனக் கட்டைகளும். கோடுகள் - கொம்புகள். தனி அவிரும் - ஒப்பற்று விளங்கும். சுரும்பார்குழல்: இத்தலத்து அம்மையை.

2. திருமால் சிவபெருமானுக்குப் பலவகையிற் பயன் பட்ட செய்திகளை இங்கே சொல்லுகிருர். குப்பாயம் - சட்டை. திருமாலை உரித்துச் சட்டையாக அணிந்தது பைரவக் கோலத்

வெருவாழி கொள்பவனே விரலாழி கொடுப்பவனே
மருவாழி யென்றுரைக்கு மடைப்பள்ளி காப்பவனே
கையம்பா யெழுபவனே கருமுகிலாய்ச் சுமப்பவனே
வையம்பாய் வெள்விடையாய் வண்கொடியா யுறுபவனே
தேராவோர் மனையாளைச் சேர்ப்பவனே நெடுமாலென்(று)
ஓராவோர் புலவரெலா முவந்தேத்தப் பொலிவோய்கேள்.

—தாழிசை—

1. அடித்தழும்பு புறந்திருக்க வாரியர்கோ மகன்கொடுத்த
முடித்தழும்புங் கொண்டனைவெம் முலைத்தழும்பிற்
சீரியதோ!

2. அருகாக முப்புவன மடங்கவெரித் தருளுநினக்(கு)
ஒருகாக மெரித்தனையென் றுரைப்பதுமோர் புகழாமோ!

---

தில். கண்ணையே மலராக வைத்து இறைவனிடமிருந்து சக்கரத்தைத் திருமால் பெற்றனர் என்பது வரலாறு. செப்பு ஆய - செப்பின் வடிவத்தை ஒத்த. திருமாலே சிவபெருமானின் தேவியாக இருப்பார் என்பது மரபு. ‘அரியலாற் றேவிஇல்லை ஐயன் ஐயாறனார்க்கே’ (தேவாரம்). வெருவு ஆழி - பகைவர்கள் அஞ்சும் சக்கரப் படை. திருமால் இறைவனிடம் சக்கரப்படை பெற்றான் என்பது வரலாறு. விரல் ஆழி - விரலிலணியும் மோதிரம். சிவபெருமான் ஆதிசேஷனாகிய பாம்பையே மோதிரமாக அணிந்துள்ளான். மருவு ஆழி - இருப்பிடமாகப் பொருந்திய பாற்கடல். இறைவன் உண்ட ஆலகாலவிடத்தைத் தந்தமையால் பாற்கடலை மடைப்பள்ளி என்றார். அம்பாய் எழுபவன் : திரிபுர சம்ஹார காலத்தில் சிவபெருமானுக்குத் திருமால் அம்பாக இருந்தார். முகிலாய்ச் சுமப்பவன் : ஒரு கற்பத்தில் திருமால் மேக வடிவமாக நின்று இறைவனைச் சுமந்தான். வையம்பாய் - நிலத்தில் பாய்கின்ற. திருமால் இறைவனுக்கு இடபவாகனமாகவும் இடபக் கொடியாகவும் இருக்கிறார். ஓர் மனையாளைத் தேராச் சேர்ப்பவனே; திரிபுரசம்ஹார காலத்தில் பூமியையே இறைவன் தேராகக் கொண்டு சென்றான். ஓரா - நினைந்து. ஓர் புலவர் - ஒப்பற்ற புலவர்கள். இந்தத் தரவில் திருமால் சிவபெருமானுக்கு 11 வகையில் பயன்பட்டதாகச் சொல்லுகிறார்.

(தாழிசை): 1. அடித்தழும்பு - பாண்டியன் அடித்த அடியின் தழும்பு. புறத்து - முதுகில். ஆரியர்கோமகன் - ஆரிய அரசன். முடித்தழும்பு - ஆரிய அரசன் வாளை ஓச்சித் தழும்பு உண்டாகச் செய்தான் என்பது வரலாறு. வெம்முலைத்தழும்பு - விருப்பத்தைத் தரும் அம்பிகையின் நகிலால் ஏற்பட்ட தழும்பு; இது காஞ்சியில் ஏற்பட்ட வரலாறு. 2. மடங்க - முற்றும். காகம்

3. சீரியர்கைப் புனல்கொல்லோ திருந்துமைகைப்
புனன்முடிமேல்
ஆரியர்கைப் புனல்கொள்வா யடங்கநனைத்
திடுங்கொல்லோ !

4. தருநிதிக்கோ விருக்கவொரு சார்வணிக ரொடுகலந்தாய்
பெருநிதிக்கோ வெனிற்பெருமான் பேராசை பெரிதன்றே!

5. தொடிமுழங்க மணியொலித்துத் துணைவிபுரி
பூசைகொலோ
இடிமுழங்கப் புரிபூசை யெஞ்ஞான்று மினிதுவப்பாய் !

6. உனையடைந்தார் பயமகன்றின் புறுவரெனற் கணியுரகங்
கனையடைந்த விடிநோக்கிக் களித்துறைதல் கரியன்றே !

அராகம்

1. அவனவ ளதுவென வறைதரு வகைமையுள்
இவனிவ ளிதுவென வியைதர லருமையை ;

2. அருவமு முருவமு மருவமொ டுருவமும்
ஒருவற வுளையெனி னிலையென வொளிருவை ;

3. இதுவலே யதுவலே யுதுவலே யெதுவென
முதுமறை கதறவு மதன்முடி மருவுவை ;

---

எரித்தது இத்தல வரலாறு. 3. சீரியர் - அன்பர். உமைகைப் புனல் முடி - உமாதேவியின் கையிலிருந்து தோன்றிய கங்கையை அணிந்த திருமுடி. அடங்க - திருமேனி முழுவதும். ஆரிய அரசன் ஆட்டியபுனல் திருமேனி முழுவதையும் அன்பர் ஆட்டும் புனலைப் போல நனைத்திடுமோ. "ஓராறுபுக்கும் நனையாச் சடைமுடி நம்பன்" (திருவிரட்டைமணிமாலை 13) என்பது இங்கே கருதுவதற் குரியது. 4. நிதிக்கோ - குபேரன். ஒருசார்வணிகர் - பனிரெண் டாஞ்செட்டிமார். பெருநிதிக்கோ - பெரிய நிதிக்காகவோ. 5. தொடி - வளை. துணைவி - காமாட்சியம்மை. இத்தலத்தில் இடி பூசித்ததென்பது வரலாறு. 6. அணிஉரகம் - நீ அணிந்த பாம்புகள். கனையடைந்த - முழக்கத்தைப் பெற்ற. இடிஒலியைக் கேட்டு அஞ்சும் நாகம் இத்தலத்தில் பூசைசெய்யும் இடியைக் கண்டு களித்துறைகின்றது என்பது கருத்து. கரி - சாட்சி.

(அராகம்) 1. வகைமையுள் - வகையான உயிர்ப்பிரிவுகளுள். 2. ஒருவற - நீங்காமல். 3. அதன்முடி - வேதத்தின் முடியாகிய

4. இருளென நிலவென வெழுதரு கதிரென
அருளுயி ருறுதர மணிதர நிலவுவை.

தாழிசை

1. அருநாம மெனச்சொலுநின் ஆயிர நா மத்துளொரு
திருநாமங் கூற்றடுநின் றிருவடிதாக் குதன்மிகையே!

2. பிரமநீ யெனவழுதி பிரம்படியே யுணர்த்தியது
சிரமம்வே தாகமங்கள் செப்புதனின் றிருவாய்க்கே!

3. உள்வாரு ளொருவரே யொருகோடிக் கைந்துறவுங்
கள்வாரே வுடைக்கோவைக் காயவிழி மலர்த்தியதென்!

4. கண்டவிட நித்தியத்தைக் காட்டவுங்கங் காளமுதல்
அண்டவிடந் தரவைத்தா யம்புயஞ்செய் குற்றமெவன்!

---

உபநிடதம். 4. அருள் உயிர் உறுதரம் - உயிர்க்கூட்டங்கள் அருளைப் பெறுகின்ற முறையில். வெவ்வேறு பக்குவமுடைய ஆன்மாக்களுக்கு வெவ்வேறு நிலையில் எழுந்தருளிக் கருணை புரிவான். சிலருக்கு இருளைப்போல அறிவரிய பொருளாயிருப் பான். சிலருக்கு நிலவைப்போல ஓரளவு அறியக்கூடியவனுக இருப்பான். சிலருக்குக் கதிரைப்போலத் தெளிவாகத் தோற்று வான்.

(தாழிசை) 1. உன்னுடைய ஒரு நாமமே யமனை அழிக்கும்; அப்படியிருக்க உன்னுடைய திருவடியால் அவனைத் தாக்கியது மிகை. கூற்று - யமன். 2. பிரமம் - எங்கும் நிறைந்த பரம் பொருள். செப்புதல் நின்திருவாய்க்குச் சிரமம். 3. உன்னைத் தியானிக்கும் அன்பர் ஒருவரே ஒருகோடி மன்மதர்களை அழிக்கப் போதுமானவராக இருக்கவும் நீ கண்ணுல் எரித்திருக்க வேண் டாம் என்பது கருத்து. உள்வார் - தியானிப்பார். கள்வாரே உடைக்கோவை - தேன் ஒழுகும் மலரம்பையுடைய காமனை. காய - எரிக்க. 4. கண்டவிடம் - திருக்கழுத்தில் உள்ள நஞ்சு. அது இறைவன் இறவாத நித்தியப் பொருள் என்பதைக் காட்டு கின்றது. கங்காளம்முதல - முழுஎன்பு முதலியவை என்றது திருமாலின் என்பு பிரமகபாலம் முதலியவற்றை; அண்ட - பொருந்த; இடம் தர வைத்தாய். அம்புயம் - அழகிய திருத் தோள்கள். இறைவன் தன் தோள்மேல் முழு என்பு முதலிய வற்றை அணிந்து மற்றவரெல்லாம் இறந்துபடவும் அவன் இறவாதான் என்பதைக் காட்டுகின்றது. நீ நித்தியப் பொருள் என்று காட்டுவதற்கு, கழுத்தில் உள்ள விடமே போதுமானதாக இருக்கத் திருத்தோள்கள் வருந்தும்படி கங்காளம் முதலிய

5. ஒருங்கருவி வரை நிகர்சோ வொருங்கெரிக்கு நகையிருக்கப்
பெருங்கருவி பலகொண்டாய் பித்தனெனல்
விளக்கினையோ !

6. ஓரெழுத்துக் குரியபொரு ளொருநெடுமா லயனென்பார்
நீரெழுத்து நிகர்மொழிநின் னிலவிதழி முன்னெவனும் !

நாற்சீரீரடியம்போதரங்கம்

1. துருவொரு தயையினை ந் தொழிலி யற்றியும்
மருவொரு தொழிலுமில் லாத மாட்சியை ;

2. பெண்ணொரு பாலுறு பெற்றி மேவியும்
எண்ணொரு விகாரமு மிலாத காட்சியை

நாற்சீரோரடியம்போதரங்கம்

1. உள்ளொளி யாகிநின் றுணர்த்துந் தன்மையை ;

2. வெள்ளொளி விடைமிசை விளங்கு நன்மையை ;

3. அம்பல நடுப்புகுந் தாடுங் கூத்தினை ;

4. நம்பல மெனப்பலர் நவிலுஞ் சோத்தினை.

---

வற்றைச் சுமப்பதும் ஏன் என்பது கருத்து. 5. ஒருங்கு அருவி வரை நிகர் சோ - இணைந்த அருவியோடு சேர்ந்த மலையை ஒத்த திரிபுரங்கள். பெருங்கருவி - மழுமுதலிய படைக்கருவிகள். 6. ஓரெழுத்து - பிரணவம் என்பார். நீர் எழுத்து நிகர்மொழி - என்று சொல்பவர்களுடைய நீரில் எழுதிய எழுத்துக்கு நிகராகிய பொய்மொழி. இதழி - கொன்றை ; கொன்றைக்குப் பிரணவ புஷ்பம் என்பது பெயர். சிவபெருமான் பிரணவத்தின் பொருளாக உள்ளான் என்பதை அவன் அணிந்த கொன்றைமலர் காட்டியது.

நாற்சீர் ஈரடி அம்போதரங்கம் 1. துருவு - அன்பர்கள் தேடுகின்ற ஐந்தொழிலை வெவ்வேறு மூர்த்திகளின் வாயிலாக நிகழ்த்துதலால் ஒருதொழிலும் இல்லாதவன் எனகிறார். "தன் வலி ஆணை தாங்கி, மூவண்ணல் தன் சந்நிதி முத்தொழில் இயற்ற வாளா, மேவண்ணல்" - திருவிளையாடற் புராணம். 2. ஒரு பால் - ஒரு பாகத்தில்.

நாற்சீர் ஒரடி அம்போதரங்கம் 4. நம்பலம் - நம்முடைய வலிமையாக இருப்பவன். சோத்து - தோத்திரம்.

### முச்சீரோரடியம்போதரங்கம்

1. சடைநெடு முடியமர் செல்லினை ;
2. தவமுயல் பவர்வினை கல்லினை ;
3. கடையரு வடவரை வில்லினை ;
4. கவினுற நெடுமறை சொல்லினை ;
5. மிடைவலி யினர்தரு பல்லினை ;
6. விசயனொ டெதிர்பொரு மல்லினை ;
7. அடைதரு மிடையதள் புல்லினை ;
8. அளவிட லரியதொ ரெல்லினை.

### இருசீரோரடியம்போதரங்கம்

1. அருள் கொடுத்தனை ;
2. இருள் கெடுத்தனை ;
3. ஆல மாந்தினை ;
4. சூல மேந்தினை ;
5. இசைவி ரித்தனை ;
6. வசையி ரித்தனை ;
7. எங்கு நீடினை ;
8. சங்கு சூடினை ;
9. மதிய ணிந்தனை ;
10. கொதித ணிந்தனை ;
11. மழுவ லத்தினை ;
12. தொழுந லத்தினை ;
13. பொருவி றந்தனை ;
14. கருவ றந்தனை ;
15. பொய்யி னீங்கினை ;
16. மெய்யி னோங்கினை.

---

முச்சீரோரடி அம்போதரங்கம் 1. செல் - இடி. 2. கல்லினை - அழித்தாய். 3. கடையரு வடவரை - இறுதி இல்லாத மேருமலை. 5. வலியினர் - வராகவதாரம் எடுத்த திருமால். பல் - கொம்பு. 6. விசயன் - அருச்சுனன். மல்லினை - மற்போர் செய்தாய் 7. இடை அதள் புல்லினை. இடையில் புலித்தோலை உடையாகக் கொண்டனை. 8. எல் - விளக்கம்.

இருசீர் ஓரடி அம்போதரங்கம் 2. இருள் - அறியாமை. 3. ஆலம்மாந்தினை - ஆலகாலவிடத்தை உண்டாய். 5. இசை - புகழ். 6. இரித்தனை - நீங்கினுய். 8. சங்கு - காதில் உள்ள சங்கக்குழை. 10. கொதி - கோபம். 11. மழுவை வலக்கையில் வைத்தாய். 13. பொருஇறந்தனை - ஒப்பை நீங்கினுய். ஒப்பில்லாதவன் என்றபடி. 14. கருவறந்தனை - பிறப்பு இல்லாதவன் ஆனுய்.

## எனவாங்கு

### சுரிதகம்

பசித்தழூஉ ஞானப் பாலுண் மழவும்
ஏற்றெருடு சூல மேற்றதோ ளரசும்
அவிர்தரு செம்பொ னற்றிடை யிட்டுக்
குளத்தி லெடுத்துக் கொண்ட கோவுங்
கனவிலு மமரர் காணரு நின்னைப்
பரிமா மிசைவரப் பண்ணிய முதலுங்
கரைதரு தமிழ்க்குக் காணி கொடுத்த
நின்றிருச் செவிக்க ணெறிகுறித் தறியாப்
பொல்லாப் புலைத்தொழிற் கல்லாச் சிறியேன்
எவ்வகைப் பற்று மிரித்தவர்க் கன்றி
மற்றையர்க் கொல்லா வயங்கருள் பெறுவான்
கொடுவிட மமுதாக் கொண்டதை யுணர்ந்து
குற்றமுங் குணமாக் கொள்வையென் றெண்ணிப்
புன்மொழித் துதிசில புகட்டினன்
அன்மொழி யெனினு மருளுதி விரைந்தே.

### நேரிசை வெண்பா

4. விரைகமழ்பூங் கொன்றைமுடி வேய்ந்துவாட் போக்கி
வரைகமழ வீற்றிருக்கும் வள்ள – லுரைகமழ்பொற்
பாத கமலம் படுமுடியார்க் கப்பொழுதே
பாத கமலம் படும்.

---

எனவாங்கு : தனிச் சொல்.

சுரிதகம் 1. மழவு - திருஞானசம்பந்தர். 2. அரசு - திருநாவுக்கரசு. 4. கோ - சுந்தரமூர்த்தி நாயனுர். 6. முதல் - மாணிக்கவாசகர். 7. கரைதருதமிழ்க்கு - திருவாய் மலர்ந்தருளிய தேவார திருவாசகங்கள். காணிகொடுத்த - உரிமையாக வழங்கிய. 8. நெறி - செல்லும் வழி. 9. புலைத்தொழிற் சிறியேன் என்று கூட்டுக. 10. இரித்தவர்க்கு - நீக்கினவர்களுக்கு. 11. ஒல்லா - கிடைப்பதற்கரிய. 14. புகட்டினன் - புகச்செய்தேன். செவிக்கண் புகட்டினன் என முடிக்க. 15. அல்மொழி - நல்லது அல்லாத மொழி.

4. விரை - நறுமணம். பாதமாகிய கமலம்படுகின்ற முடியை உடையவர்களுக்கு என்றது அடியவர்களை. பாதகமலம் படும் - துன்பத்தைத் தருகின்ற மலங்கள் அழியும்.

### கட்டளைக்கலித்துறை

5. படர்பா தலம்பொற் கனத்தக டாமப் பசுந்தகட்டுள்
அடர்பாய் புவிமென் னிறத்தக டாமதன் மேலழுத்துந்
தொடர்பாய செம்மணி வாட்போக்கி வெற்பதிற்
றேன்றுசுடர்
இடர்பா ரகம்விண் ணகமோவ வாங்குறை யெம்மிறையே.

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

6. இறைவர்திரு வாட்போக்கி யுறைபவர்தா மாடுபுன லிரும்பார் வீழ்ந்து, துறைகொளமுன் கவிழ்த்தவொரு காகத்தை முனியாராய்த் தூய தீம்பால், அறைபடரக் கவிழ்த்தவொரு காகத்தை முனிந்தனர்பா லவாவா லென்னில், உறைசெறிபா லாழியிற்றீ வாய்க்கணையைக் கிடத்தினர்க்கஃ துண்டா மன்றே.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்

7. அன்று வருவிட மென்று கருதவ ழுன்று மதியெழும்வேய்
ஒன்று மொருவரை நின்று வளியுமு ழுன்று வருமயிலேம்
அன்று மரதந குன்று முறைவரென் வன்று யரமறியார்
என்று கரையல்கை கன்று பெறவரு ளின்று புரிகுவரே.

---

5. பாதாளத்தின்மேல் பூமியும் அதன்மேல் வாட்போக்கியும் அதன்மேல் சிவபெருமானும் இருப்பதைக் கனமான தகட்டின் மேல் மெல்லிய தகட்டை வைத்து அதன்மேல் மாணிக்கத்தைப் பதித்து அதன்மேல் சுடர் பரவுவதாக உருவகப்படுத்தினர். செம்மணி - மாணிக்கம். பாரகமும் விண்ணகமும் இடர் ஓவ ஆங்குறையும் எம்மிறை. ஓவ - நீங்க.

6. சிவபெருமான், அகத்தியருடைய குடத்திலுள்ள புனலைக் காகமாகக் கவிழ்த்த கணபதியைக் கோபிக்காமல், இத்தலத்தில் பாற்குடத்தைக் கவிழ்த்த காகத்தை எரித்தார். அது அவருக்குப் பாலின்மேல் உள்ள விருப்பத்தைக் காட்டுகின்றது. தன்னுடைய அம்பாகிய திருமாலைப் பாற்கடலில் இருக்கச்செய்தது என்ற கருத்து இப்பாடலில் தோன்றுகின்றது. தாம்ஆடுபுனல் - காவிரிநீர். முன்கவிழ்த்த காகம் விநாயகர். அறைபடர - பாறையில் பாயும்படி. பால்அவாவால் - பாலின் மேலுள்ள ஆசையால். பாலாழி - பாற்கடல். தீவாய்க்கணை - அனலைத் தன்னிடம் பெற்ற அம்பு. திரிபுரத்தை அழிக்கச் சென்றபோது சிவபெருமான் கரத்தில் இருந்த அம்பாகிய திருமால். அஃது - பால்ஆசை.

7. தோழி தலைவியை வற்புறுத்தியது. சிவபெருமான் அருள் செய்வார் என்று தோழி கூறுகிருள்.

## அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

8. புரித ருஞ்சடை தரித்தும்வின் மதனணைப் பொடித்து மென் பூங்காவி, விரித ருந்துகி லுடுத்தியு நீர்பொலி வேட மோர்ந் திலடேவி, அரிய வெம்முலைச் சுவடுமாத் திரமுணர்ந் தாசையுற் றனளந்தோ, தெரிவின் மற்றிவள் பேதைமைக் கென்செய்கோ திருமுடித் தழும்பீரே.

### நேரிசை வெண்பா

9. தழுவுமையான் முன்னுந் தமிழிறையாற் பின்னுந்
தொழுமிறையான் மேலுஞ் சுவடு - கெழுமுவகீழ்
இன்று லெனுங்குறைபோ மென்மனஞ்சேர் வாட்போக்கி
யன்று லமர்ந்தா யடி.

---

அன்று - பாற்கடலைக் கடைந்தபோது. அழன்று - வெப்பத்தைத்தந்து. மதி எழும் - சந்திரம் உதயமாவான். வேய் - மூங்கில். ஒருவரை - பொதியமலை. வளி - தென்றற்காற்று. மயிலே என்றது தலைவி தோழியை விளித்தது. மன்றும் - அம்பலத்திலும். அரதனக்குன்று - வாட்போக்கி. வன்துயரம் அறியார். இது வரையில் தலைவி கூற்றைத் தோழி கொண்டு கூறினுள். கரையல் - வருந்தாதே. கைகள் கழன்றுபோன வளைகளை மீட்டும் பெறும்படி; கன்று - வளை.

8. தோழிகூற்று செவிலி கூற்றும் ஆம். சடைதரித்தல் முதலியன அவன் பெண்ணை விரும்பாத் துறவி என்பதைப் புலப்படுத்தின. வேடம் - துறவியர்க்குரிய கோலம். தேவி முலைச்சுவடு மாத்திரம் உணர்ந்து ஆசையுற்றனள். என் செய்கோ - என்ன செய்வேன்.

9. மார்பிலும், முதுகிலும், தலையின்மேலும் தழும்புகள் உனக்கு உள்ளன. காலில் இல்லை. கல்லைப்போன்ற என் மனத்தில் உன் தாளைப் பதித்தால் காலிலும் தழும்பு உண்டாகி அந்தக் குறை போகும் என்ற கருத்தைச் சொல்லுகிறுர். முன்னும் - மார்பிலும். தமிழ்இறை - பாண்டியன். பின்னும் - முதுகிலும். தொழும் இறையால் - இத்தலத்தில் தொழும் ஆரிய அரசனல். மேலும் - முடியிலும். சுவடுகெழுமுவ - தழும்புகள் பொருந்தியுள்ளன. கீழ்இன்று - அடியில் இல்லை. ஆல் - அசை. அடியை என் மனத்திற் சேர்ப்பாயாக. வாட்போக்கி: விளி. ஆல்அமர்ந்தாய்: விளி.

கட்டளைக்கலித்துறை

10. அடியுற்ற பாதலம் பொற்றேர் செறிக்குமஞ் சாலையொளிர
கடியுற்ற செம்மணிப் பூண்வைத் திடுங்கரு வூலமுண்ணும்
படியுற் றதுவிளை நன்னில மென்பர் பசுந்தழும்பு
முடியுற் றவர்திரு வாட்போக்கி மேய முதல்வருக்கே.

புயவகுப்பு

ஆசிரியச்சந்த விருத்தம்

11. முதுமறையுணர்ந்து கவுணியர்முனன்பர்
மொழிதமிழலங்கன் முற்றப்புனைந்தன
முழுதுலகுமஞ்சி யதிர்தரவெழுந்த
முரணரமடங்கல் செற்றுப்பொலிந்தன
முகிழ்நகையணங்கு மலையரையன்மங்கை
முலையெதிருடன்று முட்டக்குழைந்தன
முடிமதிபொழிந்த நிலவெனவிளைந்து
முதிர்பொடிதிமிர்ந்து பொற்புற்றிருந்தன

பதுமமலர்தங்கு மறையவர்முகுந்தர்
படுதலையெலும்பு கட்டிச்சுமந்தன
பயின்மகமட்ட நந்த கதிரவரொழுங்கு
படுமெயிறுசிந்த மொத்தித்திகழ்ந்தன

---

10. பாதாள உலகத்துக்கும் சிவபெருமானுக்கும் உள்ள சம்பந்தத்தை இப்பாட்டு சொல்லுகிறது.

அடிஉற்ற - கீழே உள்ள. பொற்றேர் - என்றது பூமியை. கடி - காவல். செம்மணிப்பூண் - சிவந்த மணியாலான ஆபரணம். சிவந்த மணியை உடைய பாம்பு. கருவூலம் - களஞ்சியம். உண்ணும்படி உற்றது - உண்ணும்படி வந்த உணவு என்றது. நஞ்சினை. பாதாள லோகமாகிய நாகலோகத்தில் நஞ்சு உண்டாதலால் அதுவிளை நன்னிலம் என்றார்.

11. கவுணியர்முன் அன்பர் - திருஞானசம்பந்தர் முதலிய அன்பர்கள். தமிழ் அலங்கல் - தமிழ்ப் பாடல்களாகிய மாலைகள். முரண் - வலிமை. நரமடங்கல் - நரசிங்கம். பொடி - திருநீறு. திருநீற்றுக்கு நிலவு உவமை. திமிர்ந்து - பூசி.

படவரவினங்கள் பலபலவளைந்து
பணியெனவிளங்க வொப்பிப்புனைந்தன
பனியிமயமங்குல் பொதிவதெனவும்பல்
படுமுரிவையொன்ற விட்டுச்சிறந்தன

மதுமடையுடைந்து வழியமுகைவிண்ட
மணமருவுகொன்றை பெற்றுக்கமழ்ந்தன
மகிதலநடுங்க வடவரைபிடுங்கி
வரையினும்வணங்கி நிற்கப்புரிந்தன
மழலையமுதின்சொ லிளமகவுநின்று
மலரடிநடஞ்செய் பெட்புக்கிசைந்தன
மணிவலயம்விண்டு சிதறவிசயன்செய்
மலியமரெதிர்ந்து மற்கட்டிநின்றன

அதுவிதெனநெஞ்ச மலைதலறவொன்றி
யடைபவர்மலங்க ளட்டுக்களைந்தன
அகிலபகிரண்ட நிலைகெடவெழுந்த
அவிர்சிகரவிந்த மொப்பற்றெழுந்தன
அழகுகுடிகொண்டு புழுகுமலிசந்தம்
அணிபுதிசையஞ்சி யெட்டப்பரந்தன
அரதநவிலங்கன் முடியமர்தழும்பர்
அரசமையிலிங்கர் வெற்றிப்புயங்களே.

---

1. மறையவர் - பிரமன். படுதலை - கபாலம். மகம் - தக்கன் செய்த யாகம். பணி - ஆபரணம். மங்குல் - மேகம். உம்பல் படும் உரிவை - யானைத்தோல். இறையவன் தோளுக்கு இமயமும் யானைத்தோலுக்கு மேகமும் உவமை. 3. வடவரை - மேரு. வரையினும் - மூங்கிலைக் காட்டிலும். வணங்கி - வளைந்து. இளமகவு - முருகன். முருகன் சிவபெருமானுடைய திருத் தோளின் மேனின்று கூத்தாடுவதைக் குறித்தது. மணிவளையம் - மாணிக்கங்கள் அழுத்திய தோள்வளைகள். 4. சிகரவிந்தம் - முடிகளையுடைய விந்தியமலை. விந்தமலை மிகவுயர்ந்து தருக்குற்று நிற்க அதனை அகத்தியர் அடக்கினர் என்பது வரலாறு. சந்தம் அணிபு - சந்தனத்தைப் பூசி. அரதனவிலங்கல் – இரத்தினகிரி; வாட்போக்கி. அரசமையிலிங்கர் - ராச லிங்கர்.

### நேரிசை வெண்பா

12. புயறவழ நின்றவாட் போக்கியர னார்மேன்
மயறவழ நின்ற மகளே—யயறவழ
நாணோ கலையோ நகுவளையோ மற்றுள்ள
பூணோ கொடுத்தல் புகல்.

### கட்டளைக்கலித்துறை

13. புகலரும் வள்ள றிருமுடி காணப் புகுந்திளைத்தாய்
அகலரு மாரியர் கோன்வந் ததுகண் டறிகுறிவைத்(து)
இகலருந் தாளுங்கண் டின்பமுற் றானிஃ
தெண்ணுமிடத்(து)
உகலருஞ் சீர்நும் மிருவருள் யார துரைவிதியே.

### தவம்

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

14. உரைதருகா லுண்டுகாலில்லையென நடையொழிவீ
ரோங்கு கான
வரைதருவெங் குகையிருளிற் புக்கிருள்போக்
கிட்முயல்வீர் வையத் தீரே
விரைதருகற் பகநாறு மிளிர்சிகர வாட்போக்கி
வெற்பு மேவி
இரைதருவான் புனற்கங்கை முடியவரைப் போற்றினுமக்
கெம்மா சுண்டே.

---

12. செவிலிகூற்று: நீ கொடுத்தல் நாண் முதலியனவோ என்று கூட்டுக. கலை - ஆடை. இறைவன்பாலுள்ள காதலால் உடல் மெலிந்து நாண் முதலியவற்றை இழந்தாள்.

13. பிரமனைப் பார்த்துக் கூறியது. வள்ளல் - சிவபெருமான். ஆரியர்கோன் வந்து எதிர்கண்டு அறிகுறி வைத்து என்றது வாளினால் வெட்டிய அடையாளத்தைக் குறித்தது. இகல்அரும் - ஒப்பற்ற. அது - திருமுடி. அது உரை. விதியே - பிரமனே!

இறைவன் திருமுடியைக் காணமாட்டாத பிரமனைவிட இறைவனது முடியையும் அடியையும் கண்ட ஆரிய அரசன் சிறந்தவன்.

14. கடுந்தவம் புரிவாரைப் பார்த்துக் கூறியது, கால் உண்டு - காற்றை உண்டு. கால் இல்லை என - நடக்கும் கால் இல்லை என்று சொல்லும்படி எப்போதும் அமர்ந்து தவம்

## அம்மானை

இடைமடக்காய் ஈற்றடிமிக்குவந்த நான்கடிக்கலித்தாழிசை

15, எம்மா தவரு மிறைஞ்சுஞ் சடாடவியார்
செம்மா மணிவான் சிலம்பர்கா ணம்மானை
செம்மா மணிவான் சிலம்பரெனி னுய்கர்பொருள்
அம்மா விரும்புவர்நா ணற்றவரோ வம்மானை
யாசை யுடையார்நா ணரியரே யம்மானை.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

16. மான்கொண்ட கரதலத்தீர் மதுரைபுகுந்
தென்செய்தீர் வளையல் விற்றீர்
ஊன்கொண்ட வுயிர்வசைமே வுறிற்போற்று
வணிகர்குழாத் தொருவ ரென்பீர்

---

இயற்றுதலின் நடை ஒழிவீர் என்றார். கானவரை - காட்டை யுடைய மலை. இருள் போக்கிட - அறியாமையைப் போக்க. வையத்தீரே என்று பொதுவர்கச் சொன்னாலும் இங்கே தவம் புரிபவர்களைக் கொள்ளவேண்டும். தேவர்கள் வணங்கும்போது கற்பக மலரை அருச்சித்தலின் கற்பகம் நாறும் சிகரம் என்றார். இறை - நறுமணம். இரைதரு-ஓசை தருகின்ற. எம்மாசு உண்டு- எத்தகைய குற்றம் உண்டாகும்; எந்தவிதமான குற்றமும் இன்றி நன்மையே உண்டாகும் என்பது கருத்து.

கடுமையான தவம் செய்வதைக் காட்டிலும் வாட்போக்கி இறைவனை வணங்கினல் நன்மை உண்டு.

15. சடாடவியார் - சடைக்காட்டைஉடையவர். செம்மா மணி வான் சிலம்பர் - இரத்தினகிரியை உடையவர். நாய்கர் - வணிகர். இத்தலத்தில் இறைவன் வணிகர் ஈட்டிய பொருளில் 12ல் ஒரு பங்குகொள்வர். அதனால் நாய்கர் பொருள் விரும்புவர் என்றார். நாண் - நாணம். ஆசையுடையார் நாணறியார். பொருளாசையுள்ளவர்கள்நாணமில்லாதவர்என்பதுதொனிப்பொருள். திக்கையே உடையாக உடைய திகம்பரர் அரைஞாண் இல்லாதவர் என்பது இயல்பான பொருள்; இப்பொருளுக்கு ஆசை - திக்கு. நாண் - அரைஞாண் என்று பொருள்கொள்ள வேண்டும்.

16. மதுரையில் இறைவன் வளையல் விற்றது ஒரு திருவிளையாடல். ஊன் - உடம்பு. போற்று - உயிரைப் போற்றிவைக் காத. பழிவந்தால் உயிரை விடுவர் என்பது கருத்து. வணிகரின் இயல்பைக் குறிப்பது. வணிகர் இத்தலத்து வழிபடும் பனிரெண்

தேன்கொண்ட தெனப்பொருட்பா கமுங்கொள்வீர்
இன்னுமவர் தெரியா ரோர்ந்து
கூன்கொண்ட மதிமுடியீ ரென்னெனின்முன்
னெனினதுவுங் குறைவு தானே.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

17. குறையின்மா ணிக்கமலை வெள்ளிமலை நாளுங்
குலவுசோற் றுத்துறைபாற் றுறைநெய்த்தா னமுநீர்
உறையில்கரச் சிலையம்பொன் வரைநெடுமான்
முதலோர்க்(கு)
உறுபோகங் கொடுப்பதுநுந் திருவருள்பா லுறைவாள்
கறையிலறம் பலவளர்ப்பா ளொருதோழ னிதிக்கோன்
கரையில்பொருட் பங்களிப்பார் கனவணிக ருளர்நீர்
முறையிலெலும் பாதியணிந் தையமேற் றுழல்வீர்
முடித்தழும்பீ ரிதுதகுமோ மொழிமினடி யேற்கே.

---

டாம் செட்டியாரைக் குறிப்பது. பொருட்பாகம் - அவர்கள் ஈட்டிய பொருளில் 12ல் 1 பங்கு. இன்னும் அவர் தெரியார் - அந்த வணிகர் அறியாதவராக இருக்கின்றனர். ஓர்ந்து - உம் முடைய இயல்பை அறிந்து. என்எனின்-அவ்வாறு செய்ததற்கு என்ன காரணம் எனின், முன்எனின்-அதுமுன் நடந்தது என்றால் வளையல் வியாபாரம் செய்த நீர் இங்கே சிறந்த வணிகர் குழாத் தில் ஒருவராகச்சொல்லிப் பொருளில் பங்கு கொள்கின்றீர். இது நியாயமா என்று கேட்டால் அது முன் ஒருகாலத்தில் நடந்தது என்றாலும் அதுவும் குறை குறைதானே.

17. மாணிக்கமலை - வாட்போக்கி. வெள்ளிமலை - திருக் கைலாயம். திருச்சோற்றுத்துறை, திருப்பாற்றுறை, திரு நெய்த்தானம் என்பவை சோழநாட்டில் உள்ள சிவத்தலங்கள். கரச்சிலை - கையில் உள்ள வில். அம்பொன்வரை - மேருமலை. மால்முதலோர்க்கு - திருமால் முதலிய தேவர்களுக்கு போகம் கொடுப்பது - திருவருள். பால் உறைவாள் - இடப்பாகத்தில் அமர்ந்திருப்பவள். நிதிக்கோன் - குபேரன். ஐயம் - பிச்சை. மாணிக்கம், வெள்ளி, பொன் ஆகியவை மலைபோல் குவிந்திருக்க வும், சோறு, பால், நெய் ஆகிய இடங்களிருக்கவும், திருமால் முதலியவர்களுக்குப் போகம் கொடுக்கும் அருள் இருக்கவும் உம்முடைய தேவி பல அறங்களை வளர்ப்பவளாகவும், தோழன் குபேரனாகவும், வணிகர் பொருளில் பங்களிப்பாராகவும் இருக்க வும் நீர் எலும்பையணிந்து பிச்சை எடுக்கலாமா? என்றபடி.

### கட்டளைக்கலித்துறை

18. அடிபடு மால்விழி வாட்போக்கி நாத ரவிர்தழும்பு
முடிபடு நீர்கொள் குடந்தோறு மேவ முயன்றுதவம்
படிபடு மாறெவன் செய்தீர்முன் னொன்று பகைத்துடம்பு
பொடிபடு மாறுவிட் டீர்நன்று காண்கரும் புட்சங்கமே.

### மடக்கு

### கட்டளைக்கலிப்பா

19. சங்க வாய்முன மாய்ந்தது கூற்றமே
தாளை டாமுன மாய்ந்தது கூற்றமே
அங்க மாலிகை செய்யவங் கொன்றையே
அளித்தல் பேரன்பு செய்யவங் கொன்றையே
செங்கண் மால்விழி யாரர விந்தமே
திருமு டிக்கணி யாரர விந்தமே
பொங்கு போர்வை தருமணி நாகமே
புக்கி லும்பைந் தருமணி நாகமே.

---

18. இது காக்கை இனத்தைப் பார்த்துச் சொன்னது. அடிபடும்மால் விழி - அடியிலே திருமால் விழிமலரைக் கொண்ட. இத்தலத்தில் இறைவனுக்குத் திருமஞ்சனம் ஆட்டும் குடத்தில் காக்கை வடிவத்தைப் பொறித்திருப்பார்கள். ஒவ்வொரு குடத்திலும் நீங்கள் இருக்கும்படி என்ன தவம் செய்தீர்கள். படிபடு மாறு - உலகத்தில் அமையும்படி, தவம் எவன்செய்தீர். முன் ஒன்று - முற்காலத்தில் ஒரு காக்கை. திருமஞ்சனக் குடத்தைத் தட்டிவிட்ட காக்கையை இறைவன் எரித்தார் என்பது தல வரலாறு. கரும்புள்சங்க மேகரிய - பறவையாகிய காக்கை யினமே.

ஒரு காக்கையை எரியும்படி விட்டுவிட்டு வேறெந்தத் தவமும் செய்யாமலே இந்தப் பாக்கியம் உங்களுக்குக் கிடைத்தது என்றபடி.

19. சங்கவாய் முனம் ஆய்ந்தது கூற்றம் - முன்காலத்தில் ஆராய்ச்சி செய்தது; புலவர்கள் வாய்சொற்களாகிய கவிதைகளை என்றது இறைவன் தலைச்சங்கத்தில் புலவனாக எழுந்தருளி இருந்ததைக் குறித்தது. மாய்ந்தது கூற்றம் - யமன் இறந்தான். அங்கம் மாலிகை - திருமேனியில் மாலையாக அணிந்தது. செய்ய அம்கொன்றையே - செந்நிறங்கலந்த அழகிய கொன்றை

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

20. நாகமே யணிகலமாக் கொண்டவாட் போக்கி
நாதருக்கென் னுளதுமணி மலையொன்றுண் டென்று
மோகமே கொண்டனையம் மலையுமவர்க் கெங்ஙன்
முழுதுமா முள்ளதுபன் னிருபாகத் தினிலோர்
பாகமே யதுபோது மெனிற்றிருமே னியிலோர்
பாதியா ளுமைமற்றைப் பாதியுள தென்னின்
மேகமே நிகர்மேனி மாலுளன்மற் றதற்கும்
வெறுவெளியே யிவர்க்குள்து மெய்ம்மையிது மகளே.

### நேரிசை வெண்பா

21. மகளேமால் கொண்டதெவன் வாட்போக்கி யார்க்குத்
துகளேயா நீறுவிரை தோற்றென் - புகளேறு
நாகம்பூ ணஞ்சா நகுபுலித்தோ லாடைமுடி
ஏகம்பூ ணஞ்சா மெனின்.

---

மாலையே. பேரன்புசெய்ய அளித்தல் அங்கு ஒன்றையே; ஒன்று - முக்தி. மால்விழிஆர் அரவிந்தம் - திருமாலுடைய விழி திருவடியிற் பொருந்திய தாமரை மலர் ஆகும். அணி ஆர் அரவுஇந்து அம் - ஆபரணமாக இருப்பவை ஆத்திமாலையும், பாம்பும், சந்திரனும், கங்கையாகிய நீரும். புக்கில் - வாழும் இடம். பைந்தரு - பசிய மரங்களடர்ந்த. மணிநாகம் - மாணிக்க மலையாகிய வாட்போக்கி.

20. செவிலி கூற்று. இறைவன் தனக்கென்று ஒன்றுமில்லாதவர் என்று சொல்கிருள். மற்று அதற்கும் மால் உளன் - இறைவன் சிதாகாசமே தனது வடிவாக உடையவனுதலால் வெறும் வெளியே இவர்க்குளது என்ருள். ஒன்றும் இல்லாதவனை ஏன் காதலிக்கின்ருய் என்ருள்.

21. இதுவும் செவிலி கூற்று. மால் - காதல். எவன் - ஏன். துகளே ஆம் நீறு இறை - பொடியாக உள்ள திருநீறு; பூசும் வாசனைப் பொருள். விளக்கமாகத் தோற்றும் என்புகளும் மேலே ஏறும் பாம்புகளும் ஆபரணங்கள். அஞ்சா ஒரு புலித்தோல் ஆடை; நகு - விளங்கும். முடி ஏகு அம்பு - முடியில் இருப்பது ஓடும் தண்ணீர் என்பது கங்கையை. ஊண்-நஞ்சு ஆம்.

## மதங்கு

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

22. எனக்கரிய வண்டரெனுக் கனக்கரிய கண்டருறை யெழில்வாட் போக்கி, மனக்கரிய வளம்பாடி மணிமறுகி னின்ருடு மதங்கி யாரே, சினக்கரிய நுங்கள்விழி வாளிரண்டு மேயுயிருஞ் சேரப் போழுங், கனக்கரிய வாளிரண்டு கைக் கொடுவீ சுவிரிலக்குக் கருதின் யாதே.

### கட்டளைக் கலித்துறை

23. கருப்பங் கழனி வளைமா மணிவரைக் கண்ணுதருள்
விருப்பங் கழனி தமாலயற் போற்றென்றுவேண்டினுமெம்
உருப்பங் கழனி கழப்புரிந் தாலு முறுத்தமனந்
திருப்பங் கழனி கருந்தளிர் பூவையுஞ் சிந்திப்பமே.

---

22. வாள் எடுத்துக் கூத்தாடும் மதங்கர் குலப்பெண்களைப் பார்த்துச் சொன்னது. எனக்கு அரிய அண்டர் - எளியேனுக்கு காண்பதற்கு அரிய தேவர்; எனக்கு என்று ஆசிரியர் தம்மையே குறித்தார். கணக்கரிய கண்டர் - மேகத்தைபோலும் கருமை யுடைய திருக்கழுத்தையுடையவர். மனக்குஅரிய - மனத்துக்கு நினைப்பதற்கு அரிய. மணிமறுகில் - அழகிய வீதியில். சினவிழி - கரியவிழி. உயிரும்சேர - உடலோடு உயிரும் பொருந்த. போழும் - வெட்டும். கருதின் இலக்குயாது - வெட்டுதற்குக் குறிக்கும் பொருள்.

23. என்ன துன்பம் வந்தாலும் இறைவனையே சிந்திப்போம் என்கிறார். கருப்பங்கழனி - கரும்புத்தோட்டங்கள். கண்ணுதல் தாள் விருப்பம் கழல் நிதம் மால் அயன் போற்று - நுதற் கண்ணைப் பெற்ற இறைவனுடைய திருவடியில் உள்ள அன்பை விட்டுவிடு. நாள்தோறும் திருமாலையும் பிரமனையும் வணங்கு. எம் உரு பங்கு அழல் நிகழப் புரிந்தாலும் - எம்முடைய உடலின் பகுதிகளில் நெருப்புப் படியும்படி செய்தாலும். உறுத்தமனம் திருப்பம் - இறைவன் அன்பை மிகுதியாகக் கொண்ட மனத்தை அவனிடமிருந்து திருப்பமாட்டோம். கழல் நிகரும் - திருவடிக்கு ஒப்பான.

வேண்டினும், புரிந்தாலும் திருப்பம்; சிந்திப்பம். இறைவன் திருமால் பிரமன் அடியில் அன்பு செய் என்று நயமாக வேண்டிக் கொண்டாலும், நெருப்பைக் கொளுவித் துன்புறுத்தினும் நாம் மனத்தை மாற்றமாட்டோம் இறைவனுடைய திருவடிக்கு ஒப்பான பொருள்களையும் மதித்துப் பாராட்டுவோம் என்பது கருத்து.

## மடக்கு

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

24. மேதக வுரியாரும் போதக வுரியாரும்
விண்ணம் பணிவாருந் தண்ணம் பணிவாரு
மாதர மொழிவாருங் காதர மொழிவாரும்
அமலையம் பதியாருங் கமலையம் பதியாரும்
பூதர வளைவாருங் காதர வளைவாரும்
பூதம் படையாரு மேதம் படையாரு
மாதல மிசையாருங் கோதல மிசையாரும்
வரதன வெற்பாரு மரதன வெற்பாரே.

## வண்டுவிடு தூது

### கொச்சகக் கலிப்பா

25. பாராய்வாட் போக்கிப் பரமனு ரெண்காற்புள்
வாரா யறுகாற்புள் வண்டேநீ யாதலினல்
ஓராய் பயந்தபமுன் னுற்றவிரு காற்புளலை
சேரா யவர்பாலென் சிந்தைமய லோதுதற்கே.

---

24. மேதகவு உரியார் - மேன்மையை உடையவர். போதக உரியார் - யானைத்தோலைப் போர்த்தவர். விண்ணம் பணிவார் - தேவலோகத்தில் உள்ளவர்களால் வணங்கப்படுவார். தண் அம்பு அணிவார் - குளிர்ந்த நீராகிய கங்கையைத் தலையில் அணிவார். ஆதரம் மொழிவார் - அன்புடைய சொற்களை அருளுபவர். காதரம் ஒழிவார் - அச்சம் நீங்கியவர். அமலை அம்பதியார் - உமாதேவியின் திருக்கணவர். கமலை அம்பதியரர் - திருவாரூராகிய அழகிய தலத்தை உடையவர். பூதர வளைவார் - மேருவாகிய வளைவையுடைய வில்லை உடையவர்; வளைவு - வளைந்தவில். காது அரவு அடைவார் - திருச்செவியில் பாம்பை அணியாகக் கொண்டவர். பூதம் படையார் - பூதங்களையே சேனையாகக் கொண்டவர் ஏதம்படையார் - தீங்கை உண்டாக்காதவர். மாதலம் மிசையார் - பெரிய பூவுலகத்துக்கு மேற்பட்டவர். கோது அலம் இசையார் - குற்றங்களும் துன்பங்களும் பொருந்தாதவர். வரதன எற்பு ஆரும் - வரதனாகிய திருமாலின் எலும்பை ஆபரணமாகப் பூண்டவர். அரதன வெற்பார் - வாட்போக்கியில் இருப்பவர்.

25. தலைவி இறைவனிடம் வண்டைத் தூதாக விடுக்கிருள். எண்காற்புள் - சரபம். நீ அறுகாற்புள். பயம்தப - அச்சம் நீங்க. இருகாற்புள் - காகம்.

## மடக்கு

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

26. ஓதுமறை யாருமருள் யாதுமறை யாரும்
உரிவையுடை யாருமழு வெரிவையுடை யாருந்
தீதுபதி யாருமுல கோதுபதி யாருஞ்
செல்வமுடி யாருநறு வில்வமுடி யாருங்
கோதுபுரி யாரும்வெளி மீதுபுரியாருங்
கோலமறியாரு முயர் சீலமறி யாருங்
காதரவு ளாருமிய லாதரவு ளாருங்
கனவமலை யாருமர தனவமலை யாரே.

## மேகவிடு தூது

### கட்டளைக் கலித்துறை

27. மலையா னிலத்து வருவேள் சினக்குமுன் மாமுகில்காள்
தலையா னிலத்து வணங்குவல் சென்னித் தழும்பரங்க
மலையா னிலத்து விதயோகர் முன்வரு வாரணிம
தலையா னிலத்து மகிழ்ந்திருந் தேற்கத் தருதிரின்றே.

---

26. ஓதும் மறையார் - மறையை ஓதியவர். அருள்யாதும் மறையார் - அன்பர்களுக்கு சிறிதளவும் அன்பை மறைக்காதவர். உரிவை உடையார்-தோல் ஆகிய ஆடை அணிந்தவர். மழுஎரிவை உடையார் - மழுவினது வெப்பத்தையும் கூர்மையையும் உடையவர். தீதுபதியார் - தீமை தம்பால் பொருந்தாதவர். உலகுஓது பதியார் - உயர்ந்தவர்கள் துதிக்கின்ற கடவுள். செல்வம் முடியார் - முடிவில்லாத செல்வத்தை உடையவர். வில்வம்முடியார் - வில்வத்தை முடியில் அணிந்திருப்பவர். கோதுபுரியார் - குற்றத்தைச் செய்யாதவர். வெளிமீது புரியார் - ஆகாயத்தின் மேல் உள்ள இருப்பிடத்தை உடையவர்; புரி - ஊர். கோலமறியார் - அழகிய மானை உடையவர்; கோலம் அறியார் என்று பிரித்து பன்றியாகிய திருமாலால் அறியப்படாதவர் என்றும் கொள்ளலாம். உயர் சீலம் அறியார் - உயர்ந்த சீலங்கள் இன்னவென்று அறியப்படாதவர்; சீலம்மறியார் - சீலத்தையுடைய மானைக் கொண்டவர் என்றும் கொள்ளலாம். காது அரவு உள் ஆரும்-திருச்செவியில் உள்ளே பாம்பு அணிகலனுகப் பொருந்திய; ஆதரவு உளார் - அன்பு உள்ளவர். கன அமலையார் - பெருமை பொருந்திய உமாதேவியை உடையவர். அரதன அம்மலையார் - அழகிய இரத்னகிரீசுரர்.

27. மலையானிலத்து வருவேள் - தென்றலாகிய தேரையுடைய மன்மதன். தலையால் நிலத்து வணங்குவல். அம்கமலை

## வண்டுவிடு தூது

### தாழிசை

28. இன்று பைங்கிளியை யேவி னம்மைகை
யிருக்கு மோர்கிளியொ டுரைசெயும்
எகின நேடியறி யாத தேமுடிமுன்
எங்ங னின்றுசெவி யருகுறும்
ஒன்று மங்குலரு குறின்வ ளைத்திவையொ(டு)
உறுதி யென்றுசடை சிறைசெயும்.
உறுக ருங்குயிலொர் செவிலி பட்டதை
உணர்ந்த தேசெலவு ளஞ்சிடுந்
துன்று தென்றலெதிர் சென்றி டிற்கடிது
தோள்கொள் பூணிரையெ னக்கொளுந்
துச்சி லல்லவென வண்டு வாழ்செவி
துனைந்து சேரும்வலி யார்க்குள(து)
அன்று தொட்டெனது கொண்டை வாழும்வரி
வண்டிர் காண்மய லடங்கவும்
அரத ருசல ரிடத்து ரைத்தவர்
அணிந்த மாலைகொணர் மின்களே.

---

ஆனில் ஆத் துவித யோகர் முன்வருவார் - அத்துவித முக்திபெற யோகஞ்செய்யும் அன்பர்களுக்கு முன் அழகிய திருமகளையுடைய திருமாலாகிய இடபத்தின்மேல் வருபவர். அணிமதலை - அணிகின்ற கொன்றைமாலையை. யான்நிலத்து மகிழ்ந்திருந்து ஏற்கத் தருதிர் - யான் வீட்டில் மகிழ்ச்சியுடனிருந்து ஏற்றுக்கொள்ளத் தருவீர்களாக.

வேள் சினக்குமுன் சென்னித்தழும்பரும் யோகர்முன் வருவாருமாகிய இறைவர் அணியும் கொன்றைமாலையை யான் ஏற்க இன்றே தருதிர் என்று முடிக்க.

28. பிறதூதுப் பொருள்களை விடாததற்குரிய காரணங்களைச் சொல்லுகிறாள் தலைவி. அம்பிகைக்குத் தெரியக் கூடாத செய்தியாதலின் அப்பெருமாட்டி கையிலுள்ள கிளியோடு உரை செய்வது தகாததாயிற்று. எகினம் - அன்னம்; பிரமனாகிய அன்னம். நேடி - தேடி. முன்முடியறியாததே எகினம் இன்று எங்ஙன் செவியருகுறும். மங்குல் - மேகம். இறைவன் சடையில் நான்கு மேகங்கள் உள்ளன; இதை நினைந்து மேகத்தைச் சடையில் சிறை செய்வான் என்றாள். செயும் – செய்வான். செவிலி என்றது காக்கையை. பட்டது - அழிந்தது; காகம்

## காலம். மடக்கு.

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

29. மின்னுமற லுறவருந்திக் குயினடுக்குங் காலம்
விடாதுமற லுறவருந்திக் குயினடுக்குங் காலம்
மன்னுபசுந் தோகைபரி விற்குனிக்குங் காலம்
மதவேணந் தோகைபரி விற்குனிக்குங் காலந்
துன்னுகொடித் தளவமரும் பப்படருங் காலந்
தோயார்பித் தளவமரும் பப்படருங் காலம்
முன்னுவெயில் வெம்மையுறப் புணராத காலம்
முடித்தழும்பர் வெம்மையுறப் புணராத காலம்.

---

அழிந்தது இத்தலவரலாறு. செல்லவுள் அஞ்சிடும்; உள் - உள்ளத்தில். தோள்கொள்பூண் - பாம்பு. பாம்புக்குக் காற்று இரை. துச்சில் அல்லஎன - சிறிதுகாலம் தங்கும் இடம் அன்று என்று. வண்டு வாழ்செவி - சங்கு எக்காலமும் தங்கிவாழ்கின்ற திருச்செவி. துச்சிலாக அல்லாமல் புக்கில்லாகவே கொண்டு வாழும் என்றபடி. வண்டு - சங்கக்குழை; பறக்கும் வண்டு சிலேடை. வண்டுவாழும் செவியாதலின் அங்கே செல்வதற்கு வண்டுக்கே வலிமையுண்டு என்ற கருத்து தொனிக்கின்றது. புனைந்து - விரைந்து அரதனுசலர் - வாட்போக்கி எம்பெருமான்.

29. தலைவன் கார்காலத்தில் வருவதாகச் சொல்லிப் பிரிய அந்தக் கார்காலம் வந்தும் தலைவன் வாராமைகண்டு தலைவி வருந்திக் கூறியது.

மின்னும் - பளபளக்கும். அறல்உற அருந்தி - கடல்நீரை மிகுதியாக உண்டு. குயின் அடுக்குங்காலம் - மேகங்கள் சார் கின்ற கார்காலம். மறல் உற வருந்தி - மயக்கம் உண்டாக வருத்தம் அடைந்து. குயில் நடுக்குங்காலம் - குயில்களை நடுங்கச் செய்யும் காலம். பசுந்தோகை - பசிய மயில். பரிவின் - அன் போடு. குனிக்கும் - ஆடும். மதவேள் - காமன். நந்து ஓகை பரிவில் - மிகுதியாகும் மகிழ்ச்சியை நீக்குகின்ற வில்லை. குனிக் கும் - வளைக்கும். கொடிதளவம் அரும்பப்படரும் - கொடியில் பூத்த முல்லைமலர்கள் அரும்பும்படியாகப் படர்கின்றகாலம். தோயார் - கணவனுடன் சேராதார். பித்து அள்ள - மயக்கம் பொருந்த. அமரும் பப்பு அடரும் - தங்குகின்ற பசலைப் பரப்பு துன்புறுத்துகின்ற. வெயில் வெம்மை உறப்பு உணராத - வெயி லினது வெப்பத்தின் மிகுதியை அறியாத. முடித்தழும்பர் - வாட் போக்கிநாதர். வெம்மை உறப்புணராத - விருப்பம் உண்டா கும்படி சேராத.

**கட்டளைக் கலித்துறை**

30. காலங் கழியு மவமே நமன்றமர் கைக்கொளுங்கால்
மாலங் கழியும் வகையுள தோமல மாயவெனைச்
சீலங் கழியும் பருந்தாழ்நி னன்பரிற் சேர்த்தலனு
கூலங் கழியுந்தி வைப்பேத் தரதன குன்றத்தனே.

**சிலேடை**

**நேரிசை வெண்பா**

31. குன்றுத வேங்கையுமொண் கொம்புபடு வேங்கையுமெய்
பொன்று தெனப்பொலிவாட் போக்கியே - நன்றுவோர்
மின்னைப் புரப்பான் மிளிர்தரவைத் தானருள்வைத்(து)
என்னைப் புரப்பா னிடம்.

---

30. காலம் அவமே கழியும்; அவம் - வீணுக. நமன்தமர் - யமனுடைய சுற்றத்தாராகிய தூதுவர். மால் அங்கு அழியும் வகை - அப்போது என்னுடைய மயக்கம் போகும் உபாயம். சீலம் கழி உம்பரும்தாழ் - மிக்க தேவர்களும் சிறந்த பண்புகளை வணங்குகின்ற அன்பர்களில் நல் ஒழுக்கத்தைக் கண்டு தேவரும் தாழ்வர் என்பது கருத்து எனை அன்பரில் சேர்த்தல் அனு கூலம் - அடியேனை நின்னுடைய அன்பர்களோடு கூட்டுவது எனக்கு உபகாரமாகும் கழி உந்தி வைப்பு - உப்பங்கழிகளோடு சேர்ந்த கடல் சூழ்ந்த நிலவுலகம்.

31. குன்றுத வேங்கையும் - குறைவுபடாத புலித்தோலும். மெய்பொன்றுது எனப்பொலி - இறைவன் திருமேனியில் அழியாது என்று சொல்லும்படி விளங்குகின்ற கொம்புபடு வேங்கையும் மெய்பொன்தாது எனப்பொலி - மரக்கொம்பிலே தோன்றுகின்ற வேங்கை மலரும் வடிவில் பொன்னுகிய உலோகம் என்று விளங்குகின்ற; தாது - உலோகம். ஓர்மின்னை - ஒப்பற்ற மின்போன்ற உமாதேவியை. புரப்பால் மிளிர்தர வைத்தான் - திருமேனியின் ஒரு பக்கத்தில் ஒளிரும்படி வைத்தவன். என்னைப் புரப்பான் - அடியேனைக் காப்பாற்றுவான். இடம் - வாட்போக்கி.

இந்தச் செய்யுளில் முன்னிரண்டடிகளில் சிலேடையும் பின்னிரண்டு அடிகளில் திரிபும் வைத்தார்.

### கட்டளைக் கலித்துறை

32. இடம்படு மாணிக்க மாமலை மேவு மிறையவரே
திடம்படு கூற்றடு நீரேயெல் லாம்வல்ல சித்தரெனின்
நடம்படு தாமரை யென்னுளப் பாறை நடுமலர்த்த
உடம்படு வீர்மறுத் தாற்சில வல்லரென் றேதுவனே.

### குறம்

#### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

33. ஓதுவனப் பன்றிமருப் பொசித்தமலைக் குறவற்(கு)
உவந்தொருபெண் கொடுத்தகுடி யுதித்தகுற மகள்யான்
போதுறையு மோரிருவர் முத்தலைநாற் றலையார்ப்
புணர்குறிசொற் றனன்முனநின் பொலிமயிர்க்கைக் குறியம்
மாதர்கரக் குறிபலவுங் கடந்து மே லாய
வாட்குறியாய் மருவுதலின் மறைமுத லாகமங்கூறு
ஆதரநற் குறிபலவுங் கடந்துவாட் குறிமேல்
அலங்கவொளி ரைந்தலையாற் புணர்குவையின் றறியே.

---

32. கூற்று அடுநீர் - யமனை அழித்த இறைவன் மதுரையில் எல்லாம் வல்ல சித்தராக எழுந்தருளினன் என்பது அத்தல வரலாறு. நடம்படு தாமரை - நடனம் செய்கின்ற உம்முடைய தாமரை போன்ற திருவடிகள்.

என் உள்ளமாகிய பாறையில் உம்முடைய அடியாகிய தாமரை மலரும்படி செய்தால் எல்லாம் வல்ல சித்தரென்பேன், இல்லையெனில் சிலவற்றை மாத்திரம் செய்யவல்ல சித்தர் என்கிறூர்.

33. குறத்தி ஒருத்தி தலைவியைப் பார்த்துக் குறி கூறுதல்.

வனப்பன்றி மருப்பு - திருமாலாகிய காட்டுப் பன்றியின் கொம்பைச் சிவபெருமான் வேட்டுவக் கோலத்தோடு வந்து கொம்பை ஒடித்தான் என்பது வரலாறு. அருச்சுனனேடு சிவபெருமான் வேட்டுவ உருவங்கொண்டு பொருதபோது அம்பி கையும் வேட்டுவக் கோலத்தோடு வந்தமையின் ஒரு பெண் கொடுத்த குடி என்றூர். போது உறையும் ஓர் இருவர் - செந் தாமரையிலும் வெண்தாமரையிலும் தங்கும், திருமகளும், கலை

### தவம்

**நேரிசை வெண்பா**

34. அறியா தவமே யடைந்தடவி நோற்றல்
நெறியா தவமே நினைமின் - முறியார
நண்ணமா ணிக்கமலை நாத ரளித்தமரும்
வண்ணமா ணிக்க மலை.

### தழை

**கட்டளைக்கலித்துறை.**

35. மலையா வருட்சிவன் வாட்போக்கி யன்ன மயில்வனப்புக்
குலையா விளந்தளிர் கொண்டுதன் மேனி குளிரவொற்ற
நிலையாக வேற்றுத் தளிர்மேனி யாயொப்பு நீத்துவிறல்
உலையா தவநடு வாலாய மேவ வுடன்பட்டதே.

---

மகளும் ஆகிய இருவர் முத்தலையார் என்றது திருமாலை, தத்தாத்திரேயராகத் தோன்றியபோது திருமால் மூன்று தலையுடையாரானார். நாத்தலையார் - பிரமதேவர். வாட்பொறி - வாள்போன்ற அடையாளம். குறிபலவுங் கடந்து - அடையாளங்கள் பலவற்றையும் கடந்து. ஐந்தலையான் - ஐந்து தலைகளை யுடைய சிவபெருமானை.

34. தவம் செய்வாரைப் பார்த்து அதனாற் பயன் ஒன்றும் இல்லை; இறைவனைத் தியானம் செய்யுங்கள் என்று சொல்லுகிறார்.

அடவி அடைந்து அவமே நோற்றல் நெறியா - காட்டுக்குச் சென்று வீணாக விரதமிருத்தல் நல்லவழியாகுமா? தவமே - அது தவம் ஆகுமா? முறி ஆரம் நண்ண - தம்மைப் பூசித்த பத்ரங்களும் மாலைகளும் அடையும்படி; முறி - வில்வம் முதலிய இலைகள். மாணிக்கு - சண்டேசராகிய பிரமசாரிக்கு. அமலைநாதர் - உமாதேவியின் நாதராகிய சிவபெருமான். மாணிக்கமலை நினைமின்.

35. தலைவன் தந்த தழை உடையைத் தலைவி ஏற்றுக் கொண்டாளென்பதைத் தோழி அவனுக்குச் சொல்லியது.

மலையா அருள் - மயக்கமடையாமைக்குக் காரணமாகிய திருவருள். மயில் - தலைவி. இளந்தளிர் - நீ தந்த தழை உடை. தளிரை மேனியில் ஒற்றியதால் தளிர்மேனி யாயிற்று. விறல் உலையாத வ நடு ஆல் ஆயம்மேவ - வலிமைகுறையாத வகரத்தை நடுவில் பெற்ற ஆலை (ஆவலை)யுடைய தோழியர் கூட்டத்தை யடைய; வ நடு ஆல் - ஆவல் உடன்பட்டது - இசைந்தாள்.

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

36. படவா ளரவ மரைக்கசைத்த பரமர் வாழும் வாட் போக்கித், தடவாள் வரையென் மனம்போன்ற தனித்தே மனையா ளியனண்ப, விடவாள் விழிவேள் கழைக்கோடு வில்லே புருவ மெனைத்துயரங், கெடவாள் கொங்கை யிபக்கோடு கெட்டேன் மருங்குன் முயற்கோடே.

### வேற்றொலி வெண்டுறை.

37. கோடுபொலி வாட்போக்கிக் குளிர்வரைமே லஞ்சுரும்பார்
குழற்கோ மாதும்
ஏடுபொலி கடிக்கொன்றை முடிக்கொன்றை வெடுத்தணியு
மெங்கோ மானும்
மலிதளிர்ப் புன்னையும் வண்டளிர்ப் பிண்டியுங்
கலிகருங் கொண்டலுங் கவின்றசெங் கொண்டலு
மெலிவில்பைங் குவளையும் விரும்புசெங் கமலமு
மொலிகெழு மிவ்விரண் டோருழைக் கண்டெனப்
பொலிதருந் தன்மையைப் புவியுளீர் பாருமே.

---

36. தலைவன் பாங்கனிடம் இவ்விடத்து இவ்வியற்று என்றல். தலைவி இருக்கும் இடமும் இயல்பும் சொன்னபடி.

அரைக்கு அசைத்த - இடையில் கட்டிய. என்மனம் போன்ற தனித்தேம் வாட்போக்கித் தடவாள் வரை; தேம் - இடம்; தடவாள்வரை - விசாலமான ஒளி பொருந்திய மலை. விடவாள் விழி - அவள்கண் விடம்பூசிய வாள்போன்றது. வேள் கழை கோடுவில்லே புருவம் - மன்மதனது கரும்பாகிய வளைந்த வில்லே புருவம். துயரம்கெட ஆள்கொங்கை. இபக்கோடு - யானையின் கொம்பு. கெட்டேன்: இரக்கக் குறிப்பு. மருங்குல் - இடை. முயற்கோடு - முயலின் கொம்பு; இல்லாதது என்பதைச் சுட்டியது. இடை இல்லை என்றபடி.

37. சிவபெருமானும் அம்பிகையும் உடனிருக்கும் தோற்றத்துக்கு உரிய உவமைகளைச் சொல்லுகிறார்.

கோடு - சிகரம். சுரும்பார் குழலி என்றது இத்தலத்து அம்பிகையின் திருநாமம். ஏடு - இதழ். கடி - நறுமணம். பிண்டி அசோகு. ஓர் உழை - ஒரு இடத்தில். புன்னை, கருமேகம், குவளை ஆகியவை உமாதேவிக்கும், தளிரோடு கூடிய அசோகு, செம்மேகம், செந்தாமரை ஆகியவை சிவபெருமானுக்கும் உவமை.

ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவந்த ஆசிரியத்தாழிசை.

38. 1. பார்வளர்மா ணிக்கப் பராரை வரைமுடிமேல்
ஆர்வளர்செவ் வேணி யமலர் பொலிதோற்றஞ்
சீர்வளர்பொன் மேருவின்மேற் செங்கதிரை யொக்குமே;

2. விண்பொலிமா ணிக்க விசால வரைமுடிமேற்
பண்பொலிநால் வேதப் பரமர் பொலிதோற்றம்
எண்பொலியண் ணாமலைமே லேற்றுசுட ரொக்குமே;

3. தூயமா ணிக்கச் சுடரார் வரைமுடிமேல்
ஆய தழும்புமுடி யையர் பொலிதோற்றஞ்
சேயபவ ளக்கிரிமேற் செம்மணியை யொக்குமே.

நான்கடி வெளிவிருத்தம்.

39. ஒக்க வணைத்து மாக்கிடு வாரு மொருநீரே
தக்க சிறப்பிற் காத்திடு வாரு மொருநீரே
புக்கவை முற்றப் போக்கிடு வாரு மொருநீரே
மிக்க முடிக்கட் கீற்றுடை யாரு மொருநீரே.

கட்டளைக்கலித்துறை

40. நீர்கொண்ட சென்னித் தழும்புடை யீரெண் முனிள்விடைமேல்
வார்கொண்ட கொங்கைச் சுரும்பார் குழலொடும் வந்தருள்வீர்
நார்கொண்ட சிந்தை யிலாதவ னுயினு நாடிநுமைக்
கூர்கொண்ட வாள்கொண்டு வெட்டிடு வானுட் குறித்திலனே.

---

38. (1) பராரை - பருத்த அடிப்பாகம். ஆர் - ஆத்திமாலை. இரத்தினகிரிக்கு மேருவும், சிவபெருமானுக்குக் கதிரவனும் உவமை.

(2) பண்பொலி - இசையோடு விளங்குகின்ற. இரத்தினகிரிக்கு அண்ணாமலையும், சிவபெருமானுக்கு அதன்மேல் ஏற்றும் கார்த்திகைத் தீபமும் உவமை.

(3) சேய - சிவந்த. இரத்தினகிரிக்குப் பவளமலையும், சிவபெருமானுக்கு இரத்தினமும் உவமைகள்.

39. முடிக்கண் கீற்று - முடியின்மேல் வாளின் தழும்பு.

40. நார்கொண்ட சிந்தை - அன்புடைய உள்ளம். குறித்திலன் - நான் எண்ணவில்லை.

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

41. குறிபடுபன் மணிவிற்றீர் மாதுலனுய் வழக்குரைத்தீர்
கூடன் மேவி
நெறிபடுமற் றவையோரா ராரியநீர்ச் சிறுகுரையு நிரப்பு
கென்று
பறிபடுவே ணிப்புனல்வாட் போக்கியீர் பெருங்கணக்குப்
பார்த்துநின்றீர்
செறிபடுபல் கிளைவணிகர் நுங்கூட்டுக் கிசைந்தனரச்
சிறப்பொன்றோர்ந்தே.

### நேரிசை வெண்பா

42. ஓராழி மேற்கிடக்கு மோராழிக் கேவிடுக்கும்
போராழி யேந்திப் பொலியுமே-நேராகா
வெம்மா னகத்திருக்கை வீத்தேந்து வாட்போக்கி
யெம்மா னகத்திருக்கை யே.

---

41. கூடல்மேவி மணி விற்றீர்; கூடல் - மதுரை. ஒரு செட்டிப் பிள்ளைக்காக மாமனாக வந்து வழக்குரைத்தார். அவ்வாறு இரண்டுமுறை வணிகராக வந்த செயலை நினைக்க மாட்டார். ஆரிய - ஆரியமன்னனே. ஆரிய அரசனைத் தொட்டியில் குறைந்திருந்த நீரையும் நிரப்பு என்று ஏவலிட அந்த அரசன் எவ்வளவு நீர் பெய்தும் நிரம்பாமையால் பிரமசாரியாக வந்த இறைவனைத் துரத்திச்சென்று பெருமான் இலிங்கத்துள் மறைய வாளால் அவ்விலிங்கத்தை வெட்டினான் என்பது வரலாறு. நும்கூட்டு என்றது பனிரெண்டில் ஒருபங்கு பெறுவதை.

மதுரையில் வணிகராக வந்ததை எண்ணுமல் இத்தலத்தில் வணிகராகக் கணக்குப் பார்த்த சிறப்புப் பற்றியே உமக்குப் பனிரெண்டில் ஒருபங்கு கொடுத்தார் என்றவாறு.

42. திருமாலாகிய அம்பு இன்ன இன்னபடி இருக்கும் என்கிறார்.

ஓர் ஆழிமேல் - ஒப்பற்ற திருப்பாற்கடலின்மேல். ஓர் ஆழிக்கு ஏ விடுக்கும் - ஒரு கடல் சுவறும்படி அம்பை எய்வான் என்பது, இராமன் வருணன்மேல் அம்பை எய்ததை எண்ணியது. போர் ஆழி - போரில் பயன்படும் சக்கரப்படை. நேர் ஆகா - எப்பொருளும் தமக்கு ஒப்பாகாத, எம்பெருமான் என்று கூட்டுக. வெம்மான் அகம் திருக்கை - வெம்மையாகிய மகத்தத்துவமாகிய புத்தியின் உள்ளே உள்ள மயக்கத்தை. வீத்து - அழித்து. ஏந்து - உயர்த்துகின்ற. எம்மான் நகம் - திருக்கை ஏ-

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

43. ஏறெனவிப் புனத்திலடிக் கடிவருவார் நகரம்
எங்கென்பார் நெடுங்கணக்கு மோர்ந்திலரோ நீரே
பேறெனநும் மிடையுணர்ந்துற் றனமென்பா ரிடை யின்
பெற்றியிவ ருணர்வாரோ கைம்மானே டியதிவ்
ஆறெனநே டுவர்கைம்மா னுடையவாட் போக்கி
யண்ணலோ முறிகொள்ளு மென்பார்கொள் வீரிக்
கூறெனவிப் புனவேங்கை கொடுக்கவிசைந் தனமோ
குறித்தவிவர் கருத்துவிரித் துரைக்கரிதா யினதே.

### மடக்கு

### விருத்தம்

44.

ஆயு மிதழ்வாய் பானலமே யகலு மிதழ்வாய் பானலமே
அணவ மருங்கா மனப்புள்ளே யடவ மருங்கா மனப்புள்ளே
பாயுங் கயலா யினவளையே பாவிக் கயலா யினவளையே
பவளம் படர வருந்திடரே பாராய் படர வருந்திடரே

---

எம்பெருமானுடைய மேருமலையாகி வில்லைப் பிடித்த அழகிய கையில் உள்ள அம்பு. ஏ : எழுவாய். ஏ, கிடக்கும், விடுக்கும், பொலியும்.

43. தோழி யாரே இவர் மனத்து எண்ணம் யாதெனத் தேர்தல். ஏறு என - காளையைப்போல நகரம் - ஊர்; ந, என்ற எழுத்து; நெடுங்கணக்கு எழுத்துவரிசை. இடை - இடுப்பு, இடையின எழுத்து. கைம்மா - துதிக்கையையுடைய யானை, கையில் உள்ளமான். முறி - தழை. ஆவண ஓலை. வேங்கை - ஒரு மரம், பொன். ஆவண ஓலை கொள்ளும் என்பார்; யாம் இவ் வனத்தில் உள்ள பெண்ணைக் கூறுகக்கொள்வீர் என்று கொடுக்க இசைந்தோமோ என்று தொனிப் பொருளைக் கருதிச் சொன்னார். நகரம், இடை, கைம்மா, முறி என்பவற்றை ஊர், இடுப்பு, யானை, தழை என்னும் பொருளில் தலைவன் கூறினான் தோழி, நகர எழுத்து, இடையின எழுத்து கையில் உள்ளமா, ஆவண ஓலை என்று பொருள் கொண்டாள்.

44. தலைவியின் காமம் மிக்க கழிபடர் கிளவி.

ஆயும் இதழ்வாய் பானலமே - ஆராய்கின்ற மடைகளை உடைய குமுதமே அம்: சாரியை. இதழ்வாய் பால்நலம் அகலும் - உதட்டிலும் வாயிலும் முகிழ்கின்ற பால் நன்மையை நீங்கும்; கசக்கும் என்பது கருத்து.

மேயுங் குருகே யமர்கழியே வினையேற் குருகே யமர்கழியே
விரைந்தம்பரவாய்ப்படர்படவே வினையோ பரவாய்ப் படர்
வாயு மலராக் கழுநீரே மாறு மலராக் கழுநீரே [படவே
வளமா மலையா ரணையாரே மணிமா மலையா ரணையாரே.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

45 ஆர்கொண்ட செஞ்சடையீர் வணிகருணீ ரொருவரெனற் • கையமில்லை, கூர்கொண்ட சூலமழுக் கொண்டிருந்து மண்டுசினங் கொடுது ரத்திப், போர்கொண்ட வாரியர்கோன் வாள்கொண்டு வெட்டிடவும் பொறுத்துக் கொண்டீர், சீர்கொண்ட விதனுன்மற் றவர்கொடுக்கும் பொருட்பங்குஞ் சிதைத ராதே.

---

அணவ மருங்கு ஆம் அனப்புள்ளே - அருகில்வரப் பக்கத்தில் அடையும் அன்னப் பறவையே. காமன் அப்பு உள்ளே அட அமரும் - மன்மதனுடைய அம்புகள் என் உள்ளத்தில் துன்புறுத்தும்படிப் பதியும். பாயுங் கயலாய் இனவளையே - பாய்கின்ற கயல் மீன்களே, கூட்டமாகிய சங்கினங்களே. பாவிக்கு வளையே அயலாயின - பாவியாகிய எனக்கு, கையிலணிந்த வளைகள் நழுவி அயலில் விழுந்தன. பவளம் படர வருந் திடரே - பவளக்கொடி படர வருவதற்கிடமாகிய மணல்மேடே. படர் அவர் உந்து இடரே பாராய் - யான்படும் கவலையையும் தலைவர் என்பால் உண்டாக்கிய துன்பத்தையும் பார்ப்பாயாக. மேயும் குருகே அமர்கழியே - மேய்கின்ற குருகுகள் தங்கும் உப்பங்கழியே. வினையேற்கு உருகே - பாவம் செய்தவளாகிய எனக்கு உருகுவாயாக. அமர்கழியே-மன்மதன் செய்கின்ற இந்தப் போரை நீக்குவாயாக. விரைந்து அம்பரவாய் படர் படவே- கடலிடத்து விரைந்து செல்லுகின்ற படகே. பரவாய் படர் படவே வினையோ - பிறமகளிர் வாயில் பழிச்சொல்லை யானடைய விதியோ? வாயும் மலராக் கழுநீரே - வாய்மலராத கழுநீர் அரும்பே. அலர் ஆக்கு அழும் நீரே மாறும் - பிறர் சொல்லும் பழிச்சொற்கள் உண்டாக்குகின்ற அழுந்தன்மை, மாறும் : மாறுமா ? காகஸ்வரம். வளம் ஆம் அலை ஆர் அணையாரே - வளம் பொருந்திய கடலில் உள்ள அலைகளே. மணி மாமலையார் அணையார் - இரத்தினகிரியார் என்னைத் தழுவார்.

45. ஆர் - ஆத்திமாலை. அவர் - வணிகர். வணிகர்கள் உரிமையுடையவர்களாதலில் இவ்விதம் சொன்னார்.

### நேரிசை வெண்பா

46. சிதைக்கலமே யாநின் றிருவடியைப் பற்றிச்
சிதைக்கலமே யாநின்ற தீமை - புதைக்குமெழு
தோற்றப் பரவை முடியாய்சொல் வாட்போக்கி
ஆற்றப் பரவைமுடி யாய்.

### சம்பிரதம்.

#### எழுசீர்க்கழிநெடிலடி இரட்டை ஆசிரியவிருத்தம்

47. ஆயுமிவை மெய்ம்மையொவ் வொருவிர்ற் றலையொவ்
ஆழிகோத் துறவே டுப்பன் [வொர்
அம்பொற் சிலம்புகால் வளைதரப் புனைகுவன்
அண்டங்கள் பலதகர்ப்பன்
பாயுமலை சூழ்புடவி வாயலரி மலர்தரப்
பண்ணுவன் குவல யங்கைப்
பற்றுவன் றிக்காம்ப லோடுவெள் ளாம்பலும்
பற்றிக் கசக்கி யெறிவன்

---

46. சிதைக் கலமே ஆம் - பாய் மரங்களோடு கூடிய கப்பல லாக - ஏயாநின்ற தீமை சிதைக்கலம் - எம்மிடத்துத் தோன்றி யிருந்த குற்றங்களை நாங்கள் போக்கவில்லை. புதைக்கும் - ஆழ்த் துகின்ற. எழு தோற்றப் பரவை - எழுவகைப் பிறவியாகிய கடலை. முடியால்-முடித்துவிடு சொல் புகழை உடைய. ஏழுபிறவி யாகிய கடலைக் கடக்க நின் திருவடியாகிய கப்பலைப் பற்றவில்லை என்றார். ஆற்று அப்பு அரவு ஐ முடியார் - கங்கையாற்றின் தண்ணீரையும் பாம்பையும் அணிந்த அழகிய திருமுடியை உடைய வனே; ஐ - அழகு.

47. பல அற்புதச் செயல்களைச் செய்வதாக ஒரு மாந்திரீகன் சொல்லும் வகையில் அமைந்தது இப்பாடல்.

ஆழி கோத்து - கடலைக் கோத்து என்பது சம்பிரதப்பொருள். மோதிரத்தைக் கோத்து என்பது இயற்பொருள். அம்பொற் சிலம்புகால் வளைதரப் புனைகுவன் - அழகிய பொன்மலையாகிய மேருவை காலில் வளையும்படிச் செய்தணிகுவேன்; சிலம்பு என்ப தற்குக் காலில் அணியும் சிலம்பு என இயற்பொருள் கொள்க. அண்ட கோளங்கள் - முட்டை அலரி - அக்னி, சூரியன். குவல யம், பூமி, குவளை. திக்காம்பல் திக்கு ஆம்பல், திசையானை திசை யில் உள்ள ஆம்பல்மலர். வெள்ளாம்பல் - ஐராவதம், வெள்ளை ஆம்பல்மலர். எறும்பி - யானை, எறும்பு. மந்தியை - குரங்கை, வண்டை. தும்பி - யானை, வண்டு. இணையா - ஒப்பாக, ஒப்பாகாத.

ஏயுமத யானையை யெறும்பிதான் மந்தியை
இருந்தும்பி தானென்னவே
இப்பொழு தியற்றிடுவ னின்னமும் பலசெய்வன்
இத்தனையும் வித்தை யலவாற்
காயுமயின் மூவர்புரம் வேவநகை யாடுகங்
காதர னுமாத ரன்சங்
கரனதர னுசலக் கடவுளுக் கிணையாவொர்
கடவுளையு மறிவிப்பனே.

## மடக்கு

### எழுசீர்க்கழிநெடிலடி இரட்டை ஆசிரியவிருத்தம்

48. அறிதரு மிருக்கை மாணிக்க மலையே
யமையில்சொன் மாணிக்க மலையே
யவிர்தரும் வேணி யுருவுமோ ராறே
யத்துவா வுருவுமோ ராறே
முறிதலின் முடியேற் றதுமொரு வெட்டே
மூர்த்தமுந் தோமொரு வெட்டே
மூடிய தெதிரி லாவுவா வுரித்தே
மூலமீ றிலாவுவா வுரித்தே

---

48. இருக்கை - இருப்பிடம். அமை இல் சொல் - தமக்கு அமைந்த இல்லாளாகிய உமாதேவியின் சொல். மாண் இக்கு அமலை-பெருமை பொருந்திய கரும்பின் திரட்சி. ஓராறு வேணி உருவும் - கங்கையாகிய ஒரு நதி சடையின் ஊடு செல்லும். அத்துவா உருவும் ஓர் ஆறு - அத்துவாக்களின் வடிவங்களும் ஆறு. மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்துவம், கலை என்னும் ஆறும் அத்துவாக்கள் ஆகும்; இவை முத்தியடைவதற் குரிய வழிகளாகும். முடி ஏற்றதும் ஒருவெட்டு - திருமுடியில் ஏற்றுக்கொண்டதும் ஆரிய அரசன் வெட்டிய வெட்டு. மூர்த்தமும் தோம் ஒருவு எட்டு - வடிவங்களும் குற்றம் நீங்கிய எட்டு ஆகும். இதனால் இறைவனுக்கு அட்ட மூர்த்தி என்ற திருநாமம் உண்டாயிற்று. பஞ்ச பூதங்கள் இருசுடர்கள் உயிர் ஆகிய எட்டும் அவ்வடிவங்கள். எதிர் இலா உவா உரித்து மூடியது; உவா - யானை. மூலம் ஈறு இலா உவா உரித்து - ஆதியும் அந்தமும் இல்லாத இளமைத் தன்மை அவருக்கு உரியது; உவா - இளமைத் தன்மை. வன்கணை தறிபக எழுந்தது - திருமாலாகிய அம்பு தூண்பிளக்கும்படி புறப்பட்டது; என்றது நரசிங்கத்தை நினைத்தது. அம்ம - அசை. தாள் தரிப்பதும் அவன் கண்ணை -

துறிபக வெழுந்த தம்மவன் கணையே
தாடரிப் பதுமவன் கணையே
தாளெடுத் தாடிக் களிப்பதம் பலமே
சாற்றுவார்க் களிப்பதம் பலமே

குறிகொடேர் விடுவா ரம்புயத் தாரே
கொன்றைவா ரம்புயத் தாரே
கோவதெவ் வளவா மனத்தனை யரையே
கொள்ளுவா மனத்தனை யரையே.

சந்தத்தாழிசை

19. அரைவிராவ வணியுமாடை யதளதாக வன்றிவே(று)
அறைவதாக வரவமாக வணியதாக வென்புதார்
புரைவதாக விரையுநீறு புரியுமூணு நஞ்சமே
புணர்வதாக வுணர்தராது புணருமாசை கொண்டு
கரையுருத துயரினூடு கழியுமாறு கன்றியோர் [ளாள்
கடியபாவி மதனனேவு கணைதுழாவு நன்றிதோ

---

பாதத்தில் ஏற்றிருப்பது திருமாலின் விழி; கணை - கண்ணை. ஆடிக் களிப்பது அம் பலமே; அம்பலம் - நடன சபை. சாற்று வார்க்கு அளிப்பது அம்பலம்; அம் பலம்-அழகிய பயனாகிய முக்தி. தேர்விடுவார் அம்புயத்தார்; அம்புயத்தார் பிரமதேவர். வார் அம் புயத்தார் கொன்றை நீண்ட அழகிய திருத்தோளில் உள்ள மாலை கொன்றை. கோ அஃது எவ்வளவாம் - அவரைக் காண்பதற்குக் கண்ணனது எத்தகைய அளவை ஆகும்; கண்ணினாற் கண்டு அளக்க முடியாது என்றபடி; கோ கண் ; அது : பகுதிப் பொருள் விகுதி. அனத்து அனை அரை - அன்னம் போன்ற அன்னையாகிய உமாதேவியார் ஒரு பாதியில் உள்ளவர். மனத்து அனையரைக் கொள்ளுவாம் - கண்ணினால் அளக்க முடியாத அவரைத் தியானம் பண்ணுவோம் என்றபடி.

49. செவிலி கூற்று. தோழி கூற்றும் ஆம்.

அரை - இடை. அதளது ஆக - தோலாக இருக்க. அன்றி வேறு அறைவது ஆக - அஃதல்லாமல் வேறாகச் சொல்லும் திசை யாக. அரவம் ஆக அணி அது ஆக - பாம்பு திருமேனியில் அணியும் அணிகலன் ஆக. என்பு தார் புரைவது ஆக - எலும்பு மாலையை ஒத்ததாக இருக்க. விரையும் நீறு புரியும் ஊணும் நஞ்சமே புணர்வது ஆக - திருமேனியிற் பூசும் நறுஞ் சாந்து நீறாகவும், உண்ணும் உணவு நஞ்சம் என்று பொருந்துவதாகவும். உணர்தராது - இவற்றை எல்லாம்

வரையவாரும் விரையவாசம் வரையின்மாலை தந்துநீள்
வரையிராசன் மகளொடாடி மகிழிராச லிங்கரே.

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

50. கருதுந் தருதும் விருதுமலி கதியென் றுரைப்பீர் கொதிசகடும், மருதும் பொருது மெருதுடையீர் மணிமா மலையீர் யானீன்ற, இருதுங் கவன முலையாளைச் சுரும்பார் குழலி யென்றறகும், தருதுங் கருது மிடமென்னீர் தருவீர் தகாவப் பெயராட்கே.

### கட்டளைக்கலித்துறை

51. பெயராத மாற்குழி வீழ்மனத் தேரைப் பிறங்கருளாம்
துயராத வேக்கொண் டெடுத்தேறி னீமுத் துகளுமறும்

---

உணர்ந்து கொள்ளாமல். அதளதாகவும், அறைவதாகவும், அணியதாகவும், புரைவதாகவும், புணர்வதாகவும் இவற்றை உணர்தராது. கன்றி - கோபித்து. கணை துழாவும் - அம்பு உடம்பெல்லாம் புகுந்து துழாவும். நன்று இதோ - இது நன்றோ. வாசம் வரை இல் மாலை தந்து விரைய வரைய வாரும் - எல்லை இல்லாத மணத்தையுடைய மாலையை அளித்து விரைவாக இவளைத் திருமணம் செய்ய வருவீராக.

50. செவிலி கூற்று. கருதும் விருது மலி கதி தருதும் என்று உரைப்பீர் - என்னை நினையுங்கள்; சிறப்பு மிகுந்த நல்ல கதியைத் தருவோம் என்று அருளும் பெருமானே! கொதி சகடும் - கோபித்து வந்த சகடாசுரனையும். மருதும் - மருதமரமாக வந்த அசுரனையும். பொருதும் - எதிர்த்து அழித்த. எருது - திருமாலாகிய இடபம். இரு துங்க வனமுலையாள் - பரிசுத்தமான இரண்டு அழகிய தனங்களையுடைய மகள். சுரும்பு ஆர் குழலி என்றல் தகும் - வண்டு மொய்க்கின்ற கூந்தலை உடையவள் என்பது தகும். தருதும் - மணம் புரிந்து கொடுப்போம். தகா அப்பெயராட்கு - தனக்கு ஏலாத சுரும்பார் குழலி என்னும் அப்பெயரை உடைய அம்பிகைக்கு; தெய்வப் பெண்களின் கூந்தலில் வண்டு மொய்க்காது ஆதலின சுரும்பார் குழலி என்ற பெயர் அம்பிகைக்குத் தகாது என்றார். இடம் என் நீர் தருவீர் - எந்த இடத்தை நீர் தருவீர். சுரும்பார் குழலியாகிய என் மகளை நீர் ஏற்றுக் கொண்டால் அம்பிகைக்கு எந்த இடத்தைத் தருவீர் என்றபடி.

51. பெயராத மால் குழி - மீளாத மயக்கமாகிய குழியில். மயக்கமாகிய குழியில் வீழும் மனமாகிய தேரை அருளாகிய அம்பைக் கொண்டு மேலே எடுத்து அதன்கண் நீ ஏறினல்

உயராத தோவெனும் வாட்போக்கி யாய்பில
முற்றபொற்றேர்
அயராத வேக்கொண் டெடுத்தேறி முப்புர மட்டவனே.

நேரிசைவெண்பா

52. அடரும்வன மேவுமிரண் டாயிரங்கோ டேந்திப்
படரும்வன மேவலரோன் பண்வாய் – தொடருமே
நாட்போக்கி யானொருத்த னையா தருள்புரியும்
வாட்போக்கி யானொருத்தன் மா.

## சித்து

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

53. மாமேவு வாட்போக்கி மாதேவர் தமக்கிருப்பு வரையை முன்னாள், தூமேவு வெள்ளிவரை யாக்கியவண் சித்தர்யாஞ் சொல்லக் கேண்மோ, பாமேவு மற்றவர்கை

---

மூன்று மலங்களும் அறும்; மால் - மயக்கம்; ஏ - அம்பு; துகள் - மலம். மனத்தை மயங்காமல் எழுச்சி பெறச் செய்து உன்னைத் தியானிக்கும்படி பண்ணினால் மலங்கள் அறும் என்றபடி. உயராததோ எனும்: உயர்ந்ததே என்றபடி. பிலம் உற்ற பொற்றேர் - பாதாளத்தில் அழுந்திய தேராகிய பூமியை. ஏக் கொண்டு எடுத்து - அம்பாக வந்த திருமாலாகிய வராகத்தைக் கொண்டு மேலே எடுத்து; பிலத்தினின்று தேரை ஏவைக் கொண்டு எடுத்து ஏறி முப்புரம் அட்டவனாதலின். மாற்குழி விழுந்த மனத்தேரை அருளாகிய அம்பைக் கொண்டு நீ ஏறினால் மும்மலமும் கெடும் என்றார்.

52. யான் ஒருத்தன் நாட் போக்கி னையாது. ஒருத்தல் மா - யானையும் குதிரையும்; இவை எழுவாய். வனம் மேவும் இரண்டாயிரங்கோடு ஏந்திப் படரும் - அழகு பொருந்திய இரண்டாயிரங் கொம்புகளை ஏந்தி உலாவும். வனம் மேவு அலரோன் பண்வாய்த் தொடரும் - தண்ணீரில் பொருந்திய தாமரையில் இருக்கும் பிரமனுடைய கானம் இசைக்கும் வாயில் தொடர்ந்து வரும். ஒருத்தல் படரும் என்றும் மா தொடரும் என்றும் நிரல் நிறையாகக் கூட்டுக. இறைவனுடைய யானையாகிய ஐராவணம் இரண்டாயிரம் கொம்புகளை உடையது. நான்முகன் ஓதுகின்ற வேதம் இறைவனுக்குக் குதிரையாக வருவது.

53. சித்தர் ஒருவர் சொல்வதாக அமைந்தது.

இருப்பு வரையை வெள்ளிவரை ஆக்கிய - இரும்பு மலையை வெள்ளிமலை ஆக்கிய என்பது தொனிப் பொருள்; இருப்பிடமாகிய மலையை வெள்ளிமலை ஆக்கிய என்பது இயல்பான

நாகமும்பொன் னுக்கினந்தாள் பணிவா னேர்க்குப், பூமேவு
நாகலோ கத்தையும்பொன் னுலகாகப் புரிந்தோ மன்றே.

## இதுவும் அது

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

54. அன்றுமது ரையிலெல்லாம் வல்ல சித்தர்
ஆயினு ரடிபரவி யருண்மா ணிக்கக்
குன்றுறையுஞ் சித்தர்யாம் புற்கை யேனும்
கூழேனும் பசிதீரக் கொடுவா வப்பா
இன்றுவரு மிரும்புதனை யொன்றுஞ் செய்யா(து)
இருந்துதயத் துதித்ததுபொன் னென்னச் செய் [வோம்
நன்றுமறு நாள்வெள்ளி யெனவுஞ் செய்வோம்
நானிலத்து நம்மருமை யறிவார் யாரே.

## இதுவும் அது

### ௸ விருத்தம்

55. ஆரப்பா நம்மருமை யறிய வல்லார்
அகிலநிகி லம்புகழ்வாட் போக்கி கண்டக்

---

பொருள். நாகமும் பொன் ஆக்கினேம் - துத்தநாகத்தையும் பொன்னுக்கினேம் என்பது போலிப் பொருள்; மலையைப் பொன்னுக்கினேம் என்பது பொருந்தும் பொருள். இறைவன் திருக்கரத்தில் உள்ள மலை மேருவாகிய பொன்மலை. பூ - பொலிவு. நாகலோகத்தையும் - துத்தநாகமாகிய உலோகத்தையும் என்பது போலிப் பொருள்; தேவலோகம் என்பது பொருந்தும் பொருள். தேவலோகத்துக்குப் பொன்னுலகம் என்பது ஒரு பெயர்.

54. புற்கை - கஞ்சி. அப்பா என்று அழைத்தல் சித்தர்களின் வழக்கம். இரும்பை உதயத்தில் பொன்னுகச் செய்வோம்; மறுநாள் வெள்ளியாகச் செய்வோம் என்பது போலிப்பொருள். ஒன்றும் செய்யாது புதனை மறுநாள் உதயத்தில் வியாழனுகவும் அதன் மறுநாள் வெள்ளியாகவும் செய்வோம் என்பது பொருந்தும் பொருள். இரும்புதனை - இரும்பை, பெரிய புதனென்னும் கிழமையை. பொன் - தங்கம், வியாழன். வெள்ளி - வெள்ளி என்னும் உலோகம், வெள்ளிக்கிழமை.

55. கண்டக் கார் அப்பு ஆர் சடையார் - திருக்கழுத்தில் கருமையையும் நீரை உடைய சடையையும் உடையவர். கரி கொணர்க இரும்பு மாதங்கம் செய்வோம் - அடுப்புக்கரி

காரப்பார் சடையார்மே லானை மெய்யே
கரிகொணர்க விரும்புமா தங்கஞ் செய்வோம்
பாரப்பா வப்பரம ரெருத்துக் கொட்டில்
பைம்பொன்னே யெனச்செய்தோ முனமிப் போது
மோரப்பா வெனக்கொடுவா தாகந் தீர
முகந்தடிசி லளித்திடினு முகந்துண் போமே.

கலிவிருத்தம்

56. உண்ணு நஞ்சமு தாகு முனக்கமு
தெண்ணு நஞ்சமு தாகு மெனக்கிதென்
நண்ணு மாணிக்க மாமலை யாய்நகப்
பண்ணும் விண்ணம் படர்மதி வெம்மையே.

கைக்கிளை

மருட்பா

57. வெம்மையொடு தண்மை விரவத் தருமுலக
மும்மை யுடையான் முகநோக்கம் - அம்மா
தகரரு மற்றவை தனித்தனி யெழத்தரும்
புகரரு மொருவாட் போக்கிப்
பகரரு மடந்தை பனிமுக நோக்கே.

---

கொணர்க; இரும்பைப் பெரிய தங்கமாகச் செய்வோம் என்பது போலிப் பொருள்; கரியைக் கொணர்க விரும்புகின்ற மாதங்க மாகச் செய்வோம் என்பது பொருந்தும் பொருள். இங்கே கரி, மாதங்கம் என்னும் இரண்டும் யானை என்னும் பொருளை உடையவை. எருத்துக் கொட்டில் பைம் பொன்னே எனச்செய்தோம் - எருதைக் கட்டியிருக்கும் தொழுவத்தைப் பசிய பொன்னாகச் செய்தோம் என்பது போலிப் பொருள். கொட்டில் - மாடு கட்டும் இடம். எருத்துக்கு ஒட்டு இல்லைப் பொன்னே எனச் செய்தோம் - இடபமாகிய திருமாலைச் சேர்ந்த மனைவியைத் திருமகளாகச் செய்தோம் என்பது பொருந்தும் பொருள்; இல் - மனைவி; பொன் - திருமகள். அப்பா மோர் எனக் கொடுவா. உகந்து உண்போம்.

56. தலைவி கூற்று.

உனக்கு உண்ணும் நஞ்சு அமுதாகும். எனக்கு அமுது நஞ்சாகும்; அமுது - உணவு. நக - பிறர் என்னைக் கண்டு சிரிக்க. மதி வெம்மை பண்ணும்.

57. தலைவன் கூற்று.

உலக மும்மை உடையான் - மூன்றுலகத்தையும் உடைய சிவபெருமான். முக நோக்கம் - திருமுகத்தில் உள்ள விழிகள்

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

58. நோக்குறுமா ணிக்கமலை யெதிர்ப்படுமோர்
பொருளகத்து நுழைவ தன்றித்
தாக்குமது தன்னகத்து நுழையவிடங்
கொடாதமருந் தகைத்து மீது
தேக்குமொளிப் பரம்பொருளு மத்தகைத்திவ்
வொப்புமையின் றிறமு ணர்ந்து
தூக்குநவில்பவரனைய பொருளைமலைக்
கொழுந்தெனுமத் துதிமெய் தானே.

### ஊசல்

#### ஈற்றடி மிக்குவந்த நான்கடிக்கலித்தாழிசை

59. துதிக்கும் பரமர் சுரும்பார் குழலோ
டுதிக்கும்வாட் போக்கி யுறையுஞ்சீர் பாடிக்
கதிர்க்கு முலைகுலுங்கக் கைவளைக ளார்ப்ப
அதிர்க்கும் துடியிடையீ ராடுக பொன்னூசல்
ஆயும் பிடி நடையீ ராடுக பொன்னூசல்.

---

புகர் - குற்றம். இறைவனுடைய திருவிழிகளாகிய சூரியனும் சந்திரனும் வெப்பத்தையும் குளிர்ச்சியையும் கலந்து அளிக்கும். தலைவியினுடைய பார்வையோ ஒரு கால் வெப்பத்தையும், ஒரு கால் குளிர்ச்சியையும் தனித்தனி தரும் என்றான். பொது நோக்கால் வெம்மையும் குறிப்பு நோக்கால் தண்மையும் எழுந்தன.

58. மாணிக்க மலை தன்முன் வரும் ஆன்மாவின் உள்ளத்தில் நுழைவதன்றி அவ்வான்மா தனக்குள் நுழைய இடங்கொடாது. இறைவன் எல்லாப் பொருளின் ஊடும் இருப்பான். தனக்குள் புகுந்து நுழைய இடங்கொடான். மாணிக்கம் உறுதியானதா தலின் தனக்குள் எதையும் நுழையவிடாது. தூக்கு நவில்பவர் - பாட்டை உரைக்கும் கவிஞர். மலைக்கொழுந்து : இத்தலத்துப் பெருமானின் திருநாமங்களில் ஒன்று.

59. சுரும்பார் குழல் - தலத்து அம்பிகை. துடி - உடுக்கை போன்ற.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியச் சந்தவிருத்தம்

60. ஊச லாடு நெஞ்சமே யோவி மாய வஞ்சமே
வீச லாதி யங்கரே மேவி ராச லிங்கரே
வாசம் வீசு தென்றலோ வாது பாய நின்றலோ
மூச வேள தங்கையே மூட வாடு மங்கையே.

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

61. மங்கையொரு பங்குடையார் மாணிக்க மலையொளி மேன் மருவி மென்பூஞ், செங்கையர மகளிருல கத்தமர்வெண் களிற்றுடலஞ் செம்மை செய்ய, அங்கையொரு சதகோடி யானெய்த்தோர் மூழ்கவெப்போ ராற்றிற் றென்று, சங்கை யுறும் வானாறு சோணைமதி பருதியெனத் தயங்கு மாலோ.

---

60. செவிலி கூற்று.

நெஞ்சமே ஓவி - மனம் நின்று. மாய வஞ்சம் வீசல் ஆதி அங்கரே மேவு - பொய்யாகிய வஞ்சகத்தை ஒழித்தல் முதலிய நற்குணங்களாகிய அங்கங்களை உடைய அன்பர்களே அடையும்; நெஞ்சை நிறுத்துதல், வஞ்சகத்தை ஒழித்தல் முதலியவை அன்பர்களின் இலக்கணங்கள். தென்றல் ஓவாது பாய. அல் மூச - இருளானது சூழ. ஓ: அசை. வேளது அங்கை ஏ மூட- மன்மதனது அழகிய கையில் உள்ள அம்புகள் தன்னை மூடித் துன்புறுத்த.

61. மாணிக்க மலையின் ஒளி பாய்வதால் ஐராவதம் செம்மை நிறம் பெற அதைக் கண்டு இந்திரன் எந்தப் போரை ஆற்றி இஃது இரத்தத்தில் மூழ்கியது என்று ஐயுறுவான். வெண்ணிற முள்ள ஆகாசகங்கை செந்நிறமுள்ள சோணையாகவும் வெண்மதி செங்கதிராகவும் தோன்றும் என்றபடி. மாணிக்கமலை ஒளி: எழுவாய். ஒளி மருவிச் செம்மை செய்ய, ஆசங்கையுறும், தயங்கும் என்று முடிக்க.

அரமகளிர் - தேவலோகத்துப் பெண்கள். சதகோடியான் - வச்சிராயுதத்தையுடைய இந்திரன்; சதகோடி - வச்சிராயுதம். நெய்த்தோர் - இரத்தம். ஆசங்கையுறும் - ஐயத்தை அடைவான். வானாறு - ஆகாயகங்கை. சோணை - ஒரு நதி. வானாறு சோணை என. மதி பரிதி என என்று கூட்டுக.

கொச்சகக்கலிப்பா

62. மாலாய பச்சை மயிலையிடம் வைத்தனையென்
பாலா யவளும் பசப்புற்ற காரணத்தால்
மாலாய பச்சை மயிலே வலத்துவைவிண்
பாலாய வாட்போக்கிப் பைம்பொற் சிலையானே.

ஈற்றடி மிக்குவந்த நான்கடிக்கலித்தாழிசை

63. ஆனவனு காதவனென் றன்புடையார் பாலாயான்
நானவனு காதவனே நானுக வுட்குறிக்கும்
கோனவன்மு னுகியல்லாக் கோமான்மா ணிக்கமலை
வானவன்சீர் பாடாதார் வாயென்ன வாயே
மலைக்கொழுந்தென் றுரையாதார் வாயென்ன வாயே.

---

62. செவிலி கூற்று.

மாலாய பச்சை மயிலை - திருமாலாகிய பசிய வடிவம் பெற்ற உமாதேவியை. இறைவியே திருமால் என்பது சைவர் கொள்கை. இடம் - வாமபாகம். என்பால் ஆயவள் - என்னிடத்தில் உள்ள என் மகள். பசப்பு-பசலை, பசுமை. மால் ஆய பச்சை மயிலை - காதலை உடைய பசிய மயில் போன்றவளை. வலத்து வை - வலப்பாகத்தில் வைத்துக் கொள்வாயாக. பொன் சிலையான் - மேருவில்லை உடையான்.

63. ஆனவன் ஆகாதவன் என்று அன்பு உடையார்பால் ஆயான் - தன்பால் அன்புடையவர்களிடத்தில் இவன் முன்பு நமக்கு ஆனவன் என்றும் ஆகாதவன் என்றும் ஆராய்ச்சி செய்யாமல் அருள்கின்றவன். நான் அவன் ஆகாது - ஆன்மாவாகிய நான் அவனைப்போல் விபு ஆகாமல். அவனே நான் ஆக - சிவபெருமானே என் மயமாக; என்றது, சீவன் பதிகரணங்களைப் பெறுவதைக் குறித்தது. முத்தி பெற்ற ஆன்மா சிவனைப்போல விபுவாக இராமல் அவனோடு இரண்டறக் கலக்கும் நிலையைச் சொன்னபடி. உள் குறிக்கும் கோன் - திருவுள்ளத்தில் எண்ணுகின்ற பெருமான். அவன்முன் ஆகி - அவன் முதலியபொருளாகி; அவன் அவள் அது என்னும் மூவகையையும் குறித்தபடி. அல்லா-அவை அல்லாத. எல்லாவற்றோடும் கலந்தும் கலவாமல் இருக்கும் நிலையைக் குறித்தபடி.

## களி

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

64. வாயாது வருந்துமுயி ரும்பலவே பரமர்
வாட்போக்கி யமருமெழு மாதரடிப் பூசை
வீயாது செயிற்பிறிதும் வேண்டுவதோ விண்ணோர்
விரும்புசுரா பானத்தா லமரரே யானார்
தேயாது தாலத்தின் கட்குடியர் நரர்மால்
தெண்டிரைக்கட் குடியனய னலரின்கட் குடியன்
ஆயாது வீணாகத் திரிவதெவ னந்தோ
அடைவரோ குருக்களொழித் தரியபர கதியே.

## இதுவும் அது

### கட்டளைக் கலித்துறை

65. கதிகாண் வழியொன்று கூறுதுங் கேண்மின் கடற்புவியீர்
விதிகா ணரியதென் றேகஞ்ச மேவுவன் விண்டுவென்பான்
நிதிகா ணெனக்குல்லை கொள்வானிப் பூரண நீத்தலென்ன
மதிகா ணிதுகொளின் வாட்போக்கி யார்சத்தி
வாய்ப்புறுமே.

---

64. கள்ளைக் குடிக்கும் ஒருவன் சொல்லுவதாக அமைந்தது இப்பாட்டு. எழுமாதர்: இத்தலத்தில் சப்தமாதர்கள் எழுந்தருளி யிருக்கின்றனர். சுரா பானத்தால் - கட்குடியினால், அமுதத்தை உண்டதால். நரர் தாலத்தின் கட்குடியர் - மனிதர்கள் பனங் கள்ளைக் குடிப்பவர்கள்; இது போலிப்பொருள்; தாலம் - பனை. மனிதர் பூமியிலே குடியிருப்பவர்கள் என்பது பொருந்தும் பொருள்; தாலத்தின்கண் - பூமியில். மால் தெண் திரைக்கள் குடியன் - திருமால் தெளிந்த அலையை யுடைய கள்ளைக் குடிப் பவன்; இது போலிப்பொருள். திரைக்கண் குடியன்-பாற்கடலில் குடி இருப்பவன்; திரை: ஆகுபெயர். அயன் அலரின் கள்குடியன் - பிரமன் மலரால் உண்டாக்கிய கள்ளைக் குடித்தவன்; அலரின்கண் குடியன் - தாமரை மலரில் வசிப்பவன். குருக்கள் - நிறத்தை யுடைய கள், ஞானசிரியர்.

65. விதி - பிரமன். கஞ்சம் - கஞ்சா, தாமரை. குல்லை - கஞ்சா, திருத்துழாய். பூரணம் - பூரணாதி லேகியம், பூரணப் பொருளாகிய இறைவன்.

## இதுவும் அது

### எழுசீர்க்கழிநெடிலடி இரட்டை ஆசிரியவிருத்தம்

66. உற்றவொளி மாணிக்க மலையிறைவர் பனையடி
யுவந்திருப் பதும்வேடர்கோன்
உதவெச்சி லூன்மிசைந் ததுமறை மகஞ்செய
வுரைத்தவிதி யுந்தெளிகலார்
கொற்றமுறு மமரரொரு தக்கன்வேள் விக்களங்
குறுகியனு ருற்றதுணரார்
கொல்லா னெனுங்குறட் டொழுமெனலை விதியெனக்
கொள்வர்மறை வினையேயெனுர்
பொற்றகலை மான்விருப் பன்பிரமன் மாயவன்
போகுமான் பின்றொடர்பவன்
பொருகேழன் மீனுரு வவாவினன் குக்குடப்
புட்பற்று வோன்முருகவேள்
சொற்றவிவை யாவுநன் குறவுணர்ந் துட்கொடு
தொடங்குமின் சத்திபூசை
தூயதே றலுமினிய தசையுமொரு வீர்பெருஞ்
சுத்திமுத் தியுமடைவிரே.

## மடக்கு

### கட்டளைக் கலிப்பா

67. அடையு மாலை யொருவண் டரங்கமே
அப்புக் கூடு மொருவண் டரங்கமே
இடையி லாவுமை யேயிடப் பாகமே
இபவ னத்தலை யேயிடப் பாகமே

---

66. பனை அடி உவந்திருப்பது: திருப்பனந்தாள் முதலிய தலங்களில் பனை தலவிருக்ஷம். வேடர் கோன் - கண்ணப்பர். மகம் - பசுபந்தம் முதலிய வேள்விகள். அனுர் - துன்பம். குறள் சொன்னதை விதியெனக் கொள்வர்; வேதம் சொன்ன செயல் எனக் கொள்ளார். விதிவினை மறைவினை என்பன தொனி. பொற்ற - பொலிவு பெற்ற. கலைமான் - ஆண்மான், கலைமகள். மாயவன் உரு அவாவினன் என்று கூட்டுக. தேறல் - கள்.

67. அடையும் மாலை ஒருவு அண்டர் அங்கம் - உயிர் நீங்கிய தேவர்களின் எலும்புகளே மேற்கொண்ட மாலை. அப்புக்கூடும் ஒரு வண் தரங்கம் - திருமாலாகிய அம்பு தங்கியிருக்கும் கூடு

உடையெ னுவரை கூடுவ தாசையே
　　　　உன்னு மன்பரங் கூடுவ தாசையே
சடைவி ராய விருப்புச் சிவாயமே
　　　　சங்கரற்க விருப்புச் சிவாயமே.

### இதுவும் அது

68. மேவ லார்புரத் துந்தழன் மூட்டுவார்
　　　　மேவு வார்புரத் துந்தழன் மூட்டுவார்
காவன் மேவிய மாற்கும் வெளிப்ப்டார்
　　　　காவ லோவிய மாற்கும் வெளிப்படார்
ஓவ லோவினர்க் கும்பசப் பூட்டுவார்
　　　　ஓவன் மேவினர்க் கும்பசப் பூட்டுவார்
நாவ லார்புகழ் மாணிக்க மாமலை
　　　　நாய னுரு நடுநிலை யாளரே.

---

ஒப்பற்ற பாற்கடல்; தரங்கம்: ஆகுபெயர். இடை இல்லா உமை. இபவனத்து - திருவானைக்காவில். அலையே இடு அப்பு ஆகம் - அலைகள்பொருந்திய தண்ணீரே திருமேனி. திருவானைக்காவில் எழுந்தருளியுள்ள இறைவனுக்கு அப்புலிங்கம், செழுநீர்த்திரள் என்னும் திருநாமங்கள் இருப்பதை உணங்க. உடை எனு அரை கூடுவது ஆசை - ஆடை என்று இடையில் பொருந்தியது திக்கு; ஆசை - திக்கு; திகம்பரன் என்றபடி. அன்பர் அங்கு ஊடுவது ஆசை - பக்தர்கள் வெறுப்பது ஆசை. சடை விராய விருப்பு உச்சி வாய் அம் - சடையிற் கலந்த விருப்பமான பொருள் ஆகாசத்தில் பொருந்திய நீரர்கிய கங்கை; விருப்பு - விரும்பிய பொருள்; உச்சி - வானம்; அம் - நீர். சங்கரற்கு அ இருப்பு சிவாயம்; அ: சுட்டு; இருப்பு - தங்குமிடம்; சிவாயம் - வாட்போக்கி.

68. தலைவி கூற்று.

மேவலார் புரத்து - பகைவருடைய திரிபுரத்தில். தழல் - தீ. மேவு வார் புரத்து - தம்மை அடைய விரும்பும் மகளிர் உடலில். காவல் மேவிய மாற்கும் - காத்தல் தொழிலைப் பொருந்திய திருமாலுக்கும். காவல் ஓவிய மாற்கும் - கட்டுக்காவலை நீங்கிய காதலுக்கும். ஓவல் ஓவினர்க்கும் - நீங்குதலை நீங்கினவர்க்கும்; நீங்காத அன்பர்களுக்கும் என்றபடி. பசப்பு - வளம். ஓவல் மேவினர் - பிரிந்திருப்பவர். பசப்பு - பசலை.

### நேரிசை வெண்பா

69. ஆளாக வந்த வடியேற் கடர்கரும்பு
வேளாக வந்த விரவிழித்த - காளாய்
சிவாய வரையாய் தெளியவரை யாய்திக்
கவாய வரையா யருள்.

### மறம்

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

70. அருள்செறிமா ணிக்கமலை யிறைவன் செம்பொன்
அணைத்தொருவா ரிதிநாப்பண் மிதக்குந் தோணிப்
பொருள்வணிகன் முளைபல்கா னடந்த தோர்ந்து
போராட்டத் தொருவளர்ப்புப் பெண்ணை யீந்தோம்
தெருள்கிலனு யவற்கதிக னென்று வேந்தும்
தேறியொரு பெண்கேட்டான் செப்பி வற்கும்
கருளகல்யா னதிகனென வினிப்பார்ப் பானும்
கண்ணறக்கேட் பான்மறவர் குலச்சீர் நன்றே.

---

69. கரும்பு வேள் ஆகவம் தவிர விழித்த காளாய் - கரும்பு வில்லையுடைய மன்மதன் செய்த போர் நீங்கும்படி விழித்து எரித்த காளையே. தெளி அவரை ஆய் - ஞானத்தால் தெளிவு பெற்றவரை ஆராய்ந்து நாடும். திக்கு அவாய அரையாய் - திசைகளையே ஆடையாக விரும்பி அணியும் இடையை உடையவனே. அடியேற்கு அருள் என்று கூட்டுக.

70. தம் குலப்பெண்ணை விரும்பி ஒரு மன்னவன் தூது அனுப்ப அதுகண்டு மறவர் சொல்லியது. இது மகள் மறுத்து மொழிதல் என்னும் புறத்துறை.

செம்பொன் அணைத்து - செம்பொன்னைக் கூட்டி என்பது போலிப் பொருள். செம்பொன் - உமாதேவி. தோணி - தோணி புரமாகிய சீகாழி. தோணிப்பொருள் வணிகன் - தோணியிலே கொண்டுவந்த பொருளை உடைய வணிகன் என்பது போலிப் பொருள்; தோணிபுரத்தில் உள்ள பரம்பொருளாகிய வணிகன் என்பது பொருந்தும் பொருள். சிவபெருமான் வளை முதலிய வற்றை மதுரையில் விற்றதால் வணிகன் என்றார். முளை - அவர் புதல்வனாகிய முருகன். வளர்ப்புப் பெண் - வள்ளி. முருகன் பலகால் நடந்ததை எண்ணி வளர்ப்புப் பெண்ணைக் கொடுத்தோம்; பெற்ற பெண்ணைக் கொடுக்கவில்லை என்பது குறிப்பு. வணிகனுக்கு மேற்பட்ட சாதி அரசாதலின் அவர்க்கு அதிகன் என்பான். கருள் - அறியாமை. அகல் - அகன்ற. கண்ணற - தாட்சணிய மின்றி.

## இதுவும் அது

### கலிவிருத்தம்

71. நன்றக மகிழ்ந்துமற நங்கைவிழை வுள்ளத்
தொன்றரசு பொய்த்திரு முகங்கொடிவ னுற்ருய்
கொன்றணையன் மெய்த்திரு முகங்கொணர்தும் யாமே
இன்றறிக தூதமணி வெற்பரரு ளேற்றே.

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

72. ஏதமில்வாட் போக்கியிறை பஃவளைபார்ப் பனமடவா ரிடங்க வர்ந்து, மேதகுகூ டலில்விற்ருன் முனமிந்நாட் கவர்வ தெங்கு விற்பான் கொல்லோ, ஓதல்செயு முலகுள்ளங் கவர்கள்வ னுயிர்கடொறு மொளிக்குங் கள்வன், மேதகைய விவனெனும்யான் வளைகவருங் கள்வனென விள்ளு வேனே.

### கட்டளைக் கலித்துறை

73. விள்ளும் படிவரை வாட்போக்கி யீர்நும் விரைமலர்த்தார்
நள்ளும் படிகொடுப் பீர்மறுப் பீரெனி னுடுநுதற் [வீர்
கொள்ளுங் கணுங்கட் செவிப்பூணு ந்தாளுங் கொடுத்தருள்
உள்ளுங் கணைமதன் றென்றல்வெண் டிங்க ளுரனறவே.

---

71. மற நங்கை விழைவு உள்ளத்து ஒன்று அரசு - மறக்குலப் பெண்ணின்பாலுள்ள விருப்பத்தை மனத்திலே கொண்ட அரச னுடைய. பொய்த் திருமுகம் என்றது ஓலையாகிய திரு முகத்தை; மெய்த் திருமுக மென்றது தலையை. அருள் ஏற்றுக் கொணர்தும் எனக் கூட்டுக.

72. தலைவி கூற்று.

பார்ப்பன மடவார்-தாருகாவனத்து முனிவரின் மனைவிமார். கூடலில் - மதுரையில். உலகு - உயர்ந்தவர். இவன் உள்ளம் கவர் கள்வன், உயிர்கள் தொறும் ஒளிக்கும் கள்வன் எனும்.

73. தலைவி கூற்று.

விள்ளும் படி வரை - சொல்லுகின்ற முறையில் நீங்கிய; சொல்லுவதற்கு அரிய என்றபடி. நள்ளும்படி - பொருந்தும்படி. நுதற்கண்ணை மதன் உரன் அறவும், செவிப்பூணுகிய பாம்பைத் தென்றலின் உரன் அறவும், தாளைத் திங்களின் உரன் அறவும் கொடுத்தருள்வீர் என்ருள். கட்செவி - பாம்பு; பாம்புக்குத் தென்றல் உணவு. உரன் - வலிமை.

## மறம்

### நேரிசை வெண்பா

74. அறவர்புகழ் வாட்போக்கி யண்ணல்வரைப் பால்வாழ்
மறவர்குலப் பெண்வேட்ட மன்னர் - திறலின்
உறுவார்பின் றேமென் றுடன்றமர்த்து மாய்ந்து
பெறுவார்பின் றேவர்குலப் பெண்.

### கட்டளைக் கலித்துறை

75. பெண்பா லுகந்தருள் வாட்போக்கி மேய பெருந்தகைக்கு
வண்பால் கவிழ்த்தபுள் ளோகுயில் வாரிமந் தாகினியோ
விண்பா லுயர்தென்றல் வெற்பெழு மாதர் விழைந்தவெற்
கண்பா லிருளன்ப ருள்ளிரு ளோபுறங் காண்பதற்கே. [போ

---

74. அறவர் - அறம் செய்வார். திறலின் உறுவார் - வலிமையோடு இங்கே வருவார். பின்றேம் என்று-பின்வாங்கோம் என்று கூறி. உடன்று அமர்த்து - எதிர்த்துப் போர் செய்து. போரில் மாய்ந்தவர்கள் வீர சொர்க்கம் பெற்றுத் தேவமகளிருடன் இன்புறுவார் ஆதலின், மாய்ந்து தேவர் குலப்பெண் பெறுவார் என்றூர். மறவர் குலப்பெண்ணை வேட்ட மன்னர் அவளைப் பெறுவிட்டாலும் தேவர்குலப் பெண்ணைப் பெறுவார் என்று புகழ்வதுபோலப் பழித்தார்.

75. தலைவி கூற்று. குயில் முதலியவற்றை இறைவன் அடக்கவில்லை என்பதற்கு உரிய காரணங்களைக் கூறுவாள்போல அவற்றால் தனக்குத் துன்பம் உண்டாவதைக் குறிப்பிடுகிறாள்.

பெண்பால் உகந்தருள் - உமாதேவியை ஒருபாகத்தில் மகிழ்ந்து ஏற்றுக் கொண்ட. இத் தலத்தில் பாற்குடத்தைக் காகம் கவிழ்க்க அக்காகத்தை இறைவன் எரித்தான். புள் - காகம். காகமாயிருந்தால் எரிப்பார்; குயிலாதலின் ஒன்றும் செய்திலர் என்பது கருத்து. இப்படியே பின் வருவனவற்றுக்கும் கொள்க. வாரி - கடல். மந்தாகினி - கங்கை. தென்றல்வெற்பு - பொதியமலை. உள்ளிருள் - அறியாமை. புறங் காண்பதற்கு - தோல்வியுறச் செய்வதற்கு.

### பாண்

#### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

76. காணரிய மாணிக்க மலைவளரோங் கொளியிற்
கலப்புறுமின் பிதுவெனக்கொண் டுலப்பறுசீர்த்
நாணரிய பரத்தையவா வினரினிமற் றெனையும் [தலைவர்
நச்சுவர்பாண் மகனேயன் பினர்நின்பா லெனநீ
பூணரிய பொய்பூண்டு வீணையிசைத் திடுதல்
போதுமிவ ணின்றகறி நின்றனையே லெறியும்
கோணரிய கற்களினின் கருந்தலையுஞ் சுவற்பாற்
கொண்டிடுபத் தருந்தகரு மண்டிடுமான் முடிவே.

#### வஞ்சித்துறை

77. முடித்த தொழும்பர்சீர்
படித்த வன்பர்பூ
அடித்தொ ழும்பரே
தடித்த வின்பரே.

---

76. தலைவி பாணனை வாயில் மறுத்தல். ஒளியில் கலப்புறும் இன்பு - சுடர்வடிவமான இறைவனோடு இரண்டறக் கலக்கும் இன்பம். உலப்பு அறு - அழிவற்ற. பரத்தை அவாவினர் - பரத்தையை விரும்பினர்; பரம் பொருளை விரும்பினர் என்பது போலிப் பொருள். நச்சுவர் - விரும்புவரோ; காகுஸ்வரம். பரம் பொருளை விரும்பினவர் பெண்ணை விரும்புவாரோ என்ற பொருள் தொனித்தது. வீணை இசைத்திடுதல் - வீண்கருத்தைச் சொல்லுதல்; வீணையை வாசித்தல் என்பது தொனிப் பொருள். அகறி - அகல்தி; அகல்வாயாக. சுவல்பால் - பின்தோளில். பத்தர் - வீணையின் குடம். முடிவு மண்டிடும் - மரணம் உண்டாகும். ஆல்: அசை. இங்கே நீ நின்றால் உன்னைக் கல்லால் எறிந்து கொன்று விடுவேன் என்றாள்.

77. அன்பராகிய தொழும்பர். தடித்த இன்பர் - மிகுதியான இன்பத்தை உடையவர் ஆவார்.

### வஞ்சி விருத்தம்

78. இன்ப ராயொன் றிரண்டெனும்
வன்ப ராய்வழி மாற்றுவார்
முன்ப ராய்முடிக் கீற்றுளார்
அன்ப ராயமர் வார்களே.

### கட்டளைக் கலிப்பா

79. ஆர வாவு படைநெடுங் கண்ணுமை
யாள வாவொரு பாலளித் தாரந்தச்
சீர வாவு மெனக்கொரு பாலருள்
செய்த வாவிக் கொடாதமர் வாரமென்
பார வாவு குளிர்புனல் வெங்கொடும்
பால வாவழ லேந்திப் பொதுநின்று
நார வாவு முடித்தழும் பாளர்தாம்
நடுவி லாதவ ரென்னினென் னுவரே.

---

78. முன் பராய் - முன்னே நின்று இறைவரைப் புகழ்ந்து. முடிக்கீற்றுளார் - முடித்தழும்பை யுடைய இரத்தினகிரி ஈசர். அவருடைய அன்பர்களாய் அமர்கின்ற அன்பர்; எழுவாய். இன்பர் - இன்பத்தை உடையவர் ஆவார்; பயனிலை. ஆய் - ஆராய்கின்ற. ஒன்று இரண்டு எனும் வழி - ஒன்றே என்னும் ஏகான்ம வாதத்தையும் இரண்டே என்னும் துவிதத்தையும். வன் பராய் வழி - வலிய பராய் மரம் போன்ற முரட்டுவழியை; பராய் மரம் முருடுகளை உடையது; "வன்ப ராய்முரு டொக்கும் என் சிந்தையை" என்பது திருவாசகம். ஆய்வழி, ஒன்றெனும் வழி, இரண்டு எனும் வழி, பராய் வழி என்று கூட்டிப் பொருள் கொள்க. மாற்றுவார் - நீக்குவார். அமர்வார்கள் இன்பர், மாற்றுவார்.

79. தலைவி கூற்று. ஆர வாவு படை - பொருந்தும்படி தாவுகின்ற ஆயுதத்தைப் போன்ற. உமையாள் அவாவு. ஒரு பால் - ஒரு பாகத்தை. அந்தச் சீர் - அம்பிகைக்குத் தந்த அந்தச் சிறப்பு. அருள் செய்து ஒருபால் அவாவி, கொடாது அமர் வாரம் என்; வாரம் - பக்ஷபாதம். பார் அவாவு - உலகம் விரும்புகின்ற. புனல் - கங்கையையும். கொடும் பால் அவாவு - கொடிய தன்மையை விரும்பிய. பொது நின்றும் - பொதுவாக நின்றும் என்பது போலிப்பொருள்; பொது-சபை. நார்-அன்பு. நடு-நடு நிலை. புனல் ஏந்துதலும் அனல் ஏந்துதலும் சத்தியம் செய்வார் இயல்பு. அவற்றை ஏந்திப் பொதுவில் நின்றும் உமாதேவிக்கு அளித்தது போல எனக்கு அளிக்காத பக்ஷபாதம் ஏன் என்றாள்.

### நேரிசை வெண்பா

80. ஆவா வடியே னலந்தே னருள்வேத
மாவா வடியேன் மழுப்படைக்கைத் - தேவா
வரும்பாச மைந்துமற மாற்றுார்வாட் போக்கி
அரும்பாச மைந்து மற.

## இடைச்சியார்

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

81. அறவிடையார் வாட்போக்கி யண்ணலார் நகரிடைச்சி யாரே யுங்கள், உறவிடையார் வெறுப்புறுவா ராடைநீக் குபு பணப்பா லுறவெற் கீயும், தெறவிடையா ரனுருழவா திரண்டு பாற் குடங்களுமென் செங்கைக் கொள்வேன், பெறவிடையா ரருள்புரியு நயமோரோ மோரெனுஞ்சொற் பேசி டீரே.

---

80. ஆவா - அந்தோ. அலந்தேன் - இளைத்தேன். வேத மாவா - வேதமாகிய குதிரையை உடையவனே. வடி ஏல் - கூர்மையை ஏற்ற. பாசம் மைந்து மறம் மாற்றுார் - உம்பால் பற்றும் வலிமையும் வீரமும் தம்மிடத்திலிருந்து நீக்காதவர்கள்; "பாசம் பரஞ்சோதிக்கு" (திருவாசகம்); இறைவன் பாலுள்ள அன்பையும் பாசம் என்பது வழக்கு. மாற்றுாராகிய அன்பர் வாழும் வாட்போக்கி. வாட்போக்கி - வாட்போக்கியில் உள்ள ஈசனே; இட ஆகுபெயர்; அண்மை விளி ஆயிற்று. பாசம் ஐந்தும் அற - ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதானம் என்ற ஐந்து வகை மலங்களும் நீங்க. அற அருள் என்று முடிக்க.

81. ஓர் இடைச்சியைக் கண்டு காமுற்ற காமுகன் கூறியது.

அற விடையார் - தருமத்தையே இடபமாகக் கொண்ட சிவ பெருமான். உங்கள் உறவிடை யார் வெறுப்புறுவார் - உங்களுடைய நட்பினிடத்தில் யார் வெறுப்பை அடைவார். ஆடை நீக்குபு பணப் பால் உற எற்கு ஈயும் - ஆடையைநீக்கிக் காசைப் பெற்றுத் தருகின்ற பாலை நான் அடைய எனக்குத் தருவீராக; உடையை நீக்கி நாகப்பாம்பைப் போன்ற உறுப்பினிடத்தில் அமையும் தொடர்பை எனக்குத் தாரும் என்பது தொனிப் பொருள்; இதற்குப் பணப்பால் உறவு என்று பிரிக்க. தெற - துன்புறுத்த. இடை ஆர் அனுர் உழவாது - பாரத்தால் இடையானது பொறுத்தற்கரிய துன்பத்தை அடையாமல். பாற் குடங்கள் என்றது பால் நிரம்பிய குடங்களைக் குறிக்கும்;

### இதுவும் அது

நேரிசை வெண்பா

82. பேசுமா ணிக்கமலைப் பெம்மா னணிநகரத்
தேசுமாண் வீதியுலாஞ் சிற்றிடைச்சி - மூசுபூ
வண்டரே யாவார் வனமுலைசேர் வார்யாரும்
அண்டரே யாவார்மெய் யாம்.

### வலைச்சியார்

கட்டளைக் கலித்துறை

83. ஆவேறு மையர்செம் மாணிக்க மாமலை யாளர்மலர்
மேவேறு கூந்தல் வலைச்சியர் போகம் விரும்பி
யன்றோ
நாவேறு நால்வர்தம் பாவேறு மாலை நலமணக்கும்
தூவேறு தோளிற் புலவார் வலைமுன் சுமந்ததுவே.

---

தொனியால் தனங்களைக் குறித்தது. விடை பெற ஆர் அருள்புரியும் - நான் உம்முடைய சம்மதத்தைப் பெற என்னிடத்தில் பொருந்தியுள்ள அருளைப் புரிவீராக. நயம் மோரோ மோர் என்னும் சொல் - நயமான மோரோ மோர் என்று கூவும் வார்த்தை; இவ்வாறு கூறுதல் இடைச்சியர் இயல்பு. மற்றொரு பொருள்: நயம் ஓர் ஓம் ஓர் - அழகைப்பார், சம்மதத்தைத் தெரிந்து கொள். ஓம் என்றது ஆம் என்னும் பொருளுடையதாகி உடன் பாட்டைக் குறித்தது.

82. தேசு மாண் - ஒளி சிறந்த. சிற்றிடைச்சி - சிறிய இடைப்பெண், சிறிய இடையை யுடைய பெண். மூசு பூ வண்டர் ஏயா முலை - பூவில் மொய்க்கின்ற வண்டுகள் பொருந் தாத அரும்பு போன்ற தனம். வார் - கச்சு. வனம் - அழகு. அண்டர் - இடையர்; தேவர் என்பது தொனிப் பொருள்.

83. தூ - பரிசுத்தம். புலவு - மீன்நாற்றம். சிவபெருமான் மதுரையில் வலையன் உருவங்கொண்டு வலைவீசியது ஒரு திரு விளையாடல்.

4628
16 FEB 1979
MADRAS-600

### கலிவிருத்தம்

84. வேலைவாய் விடமுணும் விருப்ப ரேன்கனி
மாலைவா யமுதுணும் வாஞ்சை வைத்திலார்
கோலவாய் மணிவரைக் குழகர் மற்றவர்க்
காலவாய் விருப்பமே யளிக்கு மாலையே.

### வலைச்சியார்

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

85. மாலைமுடித் தழும்பரருள் போலெனக்கு வெளிப்பட்ட வலைச்சி யீர்நும், சேலையணைத் திடச்சிலர்வா யூறுவரால் கெளிறுசெறி திருக்கை கோப்ப, ஆலையடு கரும்பினுடைந் துளமலங்கு வார்சிலர்சொல் லயிரை யேற்க, வேலையொழி வார்சிலர்யா னுரான்மன் னச்சுறவு மேவி னேனே.

---

84. தலைவி கூற்று.

கனி மாலை வாய் அமுது - கோவைப் பழத்தின் இயல்பு போன்ற வாயில் ஊறும் நீர். வாஞ்சை - விருப்பம். மற்று: அசை. அவர்க்கு விருப்பம் அளிக்கும் மாலை ஆலவாய்; ஆலவாய் - பாம்பு ; நஞ்சை வாயிலே உடைமையின் இப் பேரைக் கொண்டது.

85. வலைச்சியைப் பார்த்து இரு பொருள்பட ஓர் ஆடவன் பேசுகிறுன். சேலை அணைத்திட - சேல்மீனைக் கையில் கொள்ள ; சேலையை அணைக்க. வாயூறுவர் - ஆசைப்படுவார். கெளிறு செறி திருக்கை கோப்ப - கெளிறு என்னும் மீனையும் செறிந்த திருக்கை என்னும் மீனையும் கையிற் கொள்ள. கெளிறு என்னும் மீனைக்கொண்ட உம்முடைய அழகிய கையைக் கோத்துக் கொள்ள. கரும்பின் உடைந்து - கரும்பைப்போல நெகிழ்ந்து. மலங்குவார் - கலங்குவார் சொல் அயிரை ஏற்க - விலைசொல்கின்ற அயிரை என்னும் மீனை வாங்க; சொல்லாகிய கற்கண்டைப் பெற என்பது மற்ருெரு பொருள். வேலை ஒழிவார் - செயலற்று நிற்பார். யான் ஆரால் மன் அச் சுறவு மேவினேன் - நான் ஆரால்யும் நின்னிட முள்ள அந்தச் சுறுமீனையும் விரும்பினேன்; நாரால் மன் நச்சு உறவு மேவினேன் - காதலால் நிலைபெற்ற விரும்புகின்ற உன்னுடைய நட்பை விழைந்தேன் என்பது வேறு பொருள்.

MADRAS-600

எழுசீர்க்கழிநெடிலடி இரட்டை ஆசிரியவிருத்தம்

86. மேவார் புரஞ்செற்ற வாட்போக்கி யார்தில்லை
மேவிநாங் கண்டதில்லை
மேவால வாயால வாய்மனண் ணுமலை
விராவியக னண்ணுமலை
மாவார் கழுக்குன்றம் வன்கழுக் குன்றமேர்
மலியொற்றி யூரொற்றியூர்
வாஞ்சியம் வாஞ்சிய மிபக்கா டிபக்காடு
மறைவனம் மறைவனநலத்
தாவார் விரும்பிமரு வாரூர் திருக்காழி
யம்மமரு வாரூர்திருக்
காழியா வடுதுறை யடுக்குமா வடுதுறைந
லவிநாசி யவிநாசிவண்
காவார் பெருந்திருக் காளத்தி யுரைதிருக்
காளத்தி யென்றுகருதிக்
கழித்தென வொழித்திடி னழித்தல்செய் பழித்தளை
கழன்றுய்வ தென்றுமனமே.

---

86. மனத்தைப் பார்த்துச் சொல்கிறார்.

ஆலவாய் ஆலவாய் - திருஆலவாய் பாம்பு. அகன் அண்ணு மலை - அகன்ற நான் அணுகாத மலை. வன்கழுக் குன்றம் - வன்மை யுள்ள கழுகுகள் பொருந்திய குன்றம். ஒற்றியூர் - தனிமையான ஊர். வாஞ்சியம் - விரும்பமாட்டோம். இபக்காடு - திரு வானைக்கா; யானைகள் நிறைந்த காடு. மறைவனம் - வேதாரணி யம், எல்லாவற்றையும் மறைக்கும் காடு. மருவு ஆரூர் மருவார் ஊர் - அன்பர்கள் சேரும் திருவாரூர் பகைவர்களுடைய ஊர். திருக்காழி - சீகாழி; திருக்கு ஆழி - மயக்கத்தைத் தரும் கடல். ஆவடுதுறை மா அடுதுறை - திருவாவடுதுறை கொல்லுகின்ற பெரிய துறை. அவிநாசி - அவிநாசி என்னும் தலம்; அழிகின்ற நாசத்தை உடையது; அவிதல் - அழிதல். திருக்கு ஆள் அத்தி - மயக்கத்தை ஆள்கின்ற கடல் போன்றது. ஒவ்வொரு தலத்தின் பேருக்கும் வேறுவகையான பொருள் அமையும்படி மடக்கிச் சொன்னர். கழித்தென - செல்லாது கழித்தாற்போல. பழித் தளை - பழிக்கு இடமாகிய பாசம்.

## கூத்தராற்றுப்படை

### நேரிசை ஆசிரியப்பா

87. மனனமர் பவுரி மலைப்புப் பித்தம்
கடகமுள் ளாளனங் கரணங் குனிப்பு
வீரட் டானம் விரும்பும் பிரமரி
பரத மிலயம் புரிய முப்பிதம்
ஆமுதற் பலவு மரிறப நடிக்கும்

கூத்தன் மகனே கூத்தன் மகனே
கடற்புவி யாளுங் காவலன் மிகனலன்
நின்போல் யானு நிகழொரு கூத்தன்
மகனே யென்வாய் மாற்றங் கேண்மதி
வலம்பா டொழிக்கு மிலம்பா டெய்தி

மெய்நவின் றறியா வீணர்வாய் பொருவக்
கொடிறுவீங் காது குதட்டலு மொழிந்த
வாயிடை நீர்நசை வந்த காலை
உறுமறு சுவையுளொன் றுள்ள வூறலால்
அறுதி செய்தாங் கரும்பசி மேவின்

மற்றதை யொழிக்கும் வகையறி யாது
முற்ற வருந்தி மூர்ச்சித் துடைந்து
சாந்திரா யணங்கிரிச் சரமுதற் கொடிய
விரதங் கொண்டோர் மேனியே பொருவ
என்பு நரம்பு மெண்ண வெளிப்பட்

---

87. வரி 1-4. பவுரி, மலைப்பு, பித்தம், கடகம், உள்ளாளம், கரணம், குனிப்பு, வீரட்டானம், பிரமரி, பரதம், இலயம், புரியம், உப்பிதம் என்பன கூத்து வகைகள். 5. அரில் தப-குற்றம் நீங்க. 10. வலம் பாடு - வெற்றியையும் பெருமையையும். இலம் பாடு - வறுமை. 12. கொடிறு வீங்காது - வாயில் எதையேனும் அடக்கிக் கன்னம் வீங்காமல். குதட்டல்-மெல்லுதல். 13. நீர்நசை- தாகம். 14. ஆறு சுவைகளுள் ஒன்றை நினைக்க வாயில் நீர் ஊறுதலால். 15. அறுதி செய்து - தாகத்தைப் போக்கி. 17-8. உடைந்து - வருந்தி. சாந்திராயணம் - பௌர்ணமி தொடங்கி அமாவாசைவரை ஒவ்வொரு பிடி சோறு குறைத்துண்டு அமாவாசை தொடங்கிப் பௌர்ணமி வரை ஒவ்வொரு பிடி சோறு கூட்டி உண்டு நோற்கும் ஒரு விரதம். கிரிச்சரம் - பாவம் போக்க

டுதிற் பறக்க வுடம்படு மேனியில்
போர்த்த போர்வை புன்மயி ருருவிப்
படிந்துதன் காரணம் பரப்பிக் காட்டச்
சிலம்பிநூல் கீழுஞ் சிதன்மண் மேலும்
பொதியவுட் பட்ட புற்செறி குரம்பை

உள்வாய்ப் பஃறுளை யொருபட லடைத்தாங்
கீந்திலை வெளிப்பட் டெங்கு முறுத்தப்
படுமொரு பழம்பாய் விடுதலை யணையொடு
நாணிலாத் தனுவென நகத்தனு முடக்கி
வாடைவந் துடற்ற மலிகுளிர்க் குடைந்து

சானு விரண்டுந் தாடி தகர்க்க
ஓட்டமு மதரமு மொழிவின்றி நடுங்கத்
தருமிரு நிரைப்பலுந் தாளந் தாக்க
உலங்கு மசகமும் விலங்காது கறிக்கப்
பசித்தழல் வெதுப்பப் பழவினை நினைந்து

முடக்கொழி யாது கிடக்குங் காலைப்
பல்லியு மரணையும் பாங்குற முட்டையிட்
டெல்லியும் பகலு மிரியாது கிடக்கும்
பவுத்த ரமணர் பாழ்நுதல் பொருவ
அடலைகண் டறியா வடுப்பக மருவிப்

---

மேற்கொள்ளும் விரதம். 22 - 3. கம்பளிப் போர்வையிலுள்ள மயிர் எல்லாம் உதிர்ந்தன. போர்வை காரியம்; மயிர் காரணம். 24 - 5. புல் வேய்ந்த கூரையின் உள்ளே சிலந்திநூலும் மேலே கறையான் மண்ணும் இருந்தன. சிலம்பி - சிலந்தி. சிதல் - கறையான். குரம்பை - கூரை. 27-8. ஈந்திலையால் செய்த பாய். விடு தலையணையொடு - விட்ட தலையணையொடு; என்றது தலையணை இல்லாமையைக் குறித்தது. 29. நாண் இல்லாத் தனு என நக - நாண் இல்லாத வில் என்று பிறர் சிரிக்க; என்றது விறைத்துக் கிடந்த உடலைச் சொன்னது. அது கேட்டு உடம்பை முடக்கிக்கொண்டு. 31. சானு - முழங்கால். தாடி - மோவாய். 32. ஓட்டம் - மேலுதடு. அதரம் - கீழ் இதழ். 33. நிரை - வரிசை. 34. உலங்கு, மசகம் - கொசு வகைகள். கறிக்க -கடிக்க. 38. எல்லி - இரவு. 40. அடலை - சாம்பல். 42. மாலைத்

பெரிது நோக்கிப் பெருமூச் செறிந்து
மாலைத் தாமரை மலர்புரை முகத்தொடு
மதுவந் துளிக்கு மழலைவாய்ச் சிருஅர்
பொதிசித ருடைக்குங் கதியில் லாது
கையே கொண்டு மெய்யினை மூடிய

வேயடு மென்றேட் டாய்முக நோக்க
மற்றவள் வருந்தி வறுங்கை நீட்டி
மார்பிடை யணைப்பச் சோர்தரு கண்ணீர்
சிறிதிடை யின்றியச் சிருருட னணைப்ப
மற்றவ் வீர மொற்றிடக் கருதி

ஒருகை நீட்டி யொருவருக் கொருவர்
கோவணம் பறிக்கக் கூகூ வென்றுங்
கழுகுர லென்செவி யுழுகுர லாக
என்செய் வாமென் றிறப்பதற் கெண்ணி
ஒருப்படு காலைநல் லூழ்பிடித் துந்த

மடிசற் றின்றிக் கடிதவ ணின்று
எளிவந் தம்ம விரைந்து நடந்து
மாணா டென்னுஞ் சோணா டடைந்து
பூவிரி பொழிற்குலைக் காவிரி மூழ்கித்
திருத்தகு மந்நதித் தென்பா லுற்றேன்

பாயிருள் பருகும் பகற்கதி ரநேகம்
ஒருழித் திரண்டாங் குதித்துநின் றென்னச்
சேயொளி விரிக்குஞ் செம்மலை யொன்று
கண்டன னுங்குக் கைகுவித் தேத்திப்
பெயரரு மிம்மலைப் பெயர்யா தென்று

வினவினன் கேட்ட மேதகு பெரியோர்
அரதன சலமீ தலங்குற விதன்மேல்
தழைதர வமர்சிந் தாமணி யொன்றுண்
டன்னது காண்போ ரரும்பெறல் வளங்கள்

---

தாமரை - குவிந்த தாமரை. 44. சிதர் உடை - கந்தைஆடை. 46. வேய் - மூங்கில். 56. மடி - சோம்பல். 58. மாண் நாடு - மாட்சியுடைய நாடு. 59. குலை - கரை. 72. படித்தலம் -

எல்லா முடையா ரென்றினி திசைப்ப
ஒருங்கெழு மகிழ்வி னூக்கமிக் கடைந்து
படித்தல நின்றுவிண் படர்வதற் கிட்ட
ஏணியிற் பொலிசோ பானவழி யேறிப்
பிறங்குறும் வயிரப் பெருமாள் காவலின்
அறங்குல வம்மலை யணிமுடி யடைந்து
செயிரறு பொன்செய் சினகரம் புக்காங்
கெய்ப்பிடை வைப்பொன் றெதிருறக் கண்டெனச்
செந்தா மரைக்கட் டிருமறு மார்பனும்
அந்தா மரைவா ழண்ணலு மின்னும்
காணுப் பொருளைக் கண்டனன் மாதோ
தனிப்பெருந் திருமுன் றண்டனிட் டெழுந்தேன்
அடங்கா வுவகை மடங்காது பொங்கக்
கூடினன் றழைந்துசற் றூடின னப்பொழு
தெண்டோ ளப்பொரு ளின்னருள் சுரப்ப
வடதிசை நிதிக்கோன் மனமழுக் கறுப்பப்
பெறலரு வளங்கள் பெரிதும் பெற்றனன்
அன்றே யுவகை யார்கலி மூழ்கினன்
இன்னே விரைந்தவ ணேகுதி
என்னே பெறலரி தெல்லா முறுமே.

நேரிசைவெண்பா

88. உறவே தவித்தா யொளியிழைவாட் போக்கித்
திறவே தவித்தாய்ச் சிறந்தார் - நறவே
தருங்கொன்றை யம்பார் சடையதளித் தார்நம்
மருங்கொன்றை யம்பார் வரார்.

---

பூமியாகிய இடம். 73. சோபான வழி - படிக்கட்டு. 74. வயிரப் பெருமாள்: இங்குள்ள காவல் தெய்வம். 76. செயிர் - குற்றம். சினகரம் - கோயில். 77. எய்ப்பிடை வைப்பு - இளைத்த பொழுது உதவும் சேமிப்புப் பொருள். 78. மறு - ஸ்ரீவத்சம். 85. அழுக்கறுப்ப - பொறாமை கொள்ள. 87. உவகை ஆர்கலி - மகிழ்ச்சி என்னும் கடல்.

88. தோழி தலைவிக்குக் கூறியது. வாட்போக்கி ஈசர் மாலை தந்தார், இனி மன்மதனுடைய துன்பம் இராது என்று சொல்லுகிறாள். உறவே தவித்தாய் - மிக வேதனைப் பட்டாய்

**கட்டளைக் கலிந்துறை**

89. வரந்தரு மாணிக்க மாமலை யீசர்தம் வாம்பரியோ
திரந்தரு பாதுகை யோசிலம் போதிருக் கோவணமோ
உரந்தரு மாதன மோகோயி லோநன் கொளிருருவோ
பரந்தரு வந்திய ரோமொழி யோமெய் பகர்மறையே.

**அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்**

90. மறைபுகலும் வாட்போக்கி வள்ளலுக்கு
விடையுருவாய் மாலே செங்கை
உறையொருகோ டொழித்திருகோ டுற்றோசை
யிலாமணிநீத் தோசை மேய
அறைமணிபூண் டடர்விடமாற் றிடுவாணீத்
தஃதணுகா தமர்வா லுற்றாய்
நிறைபயனேர்ந் தனையேமா வாம்பொழுது
மவற்சுமக்க நினைத னன்றே.

---

ஒளி இழை - ஒளியை உடைய அணிகலனை அணிந்த பெண்ணே; விளி. வாட்போக்கி - வாட்போக்கியில். திற வேத வித்தாய் - பலவகைகளையுடைய வேதங்களின் வித்தாகி. இறைவனே வேதங்களின் மூலமாதலின் வேதவித்து என்றாள். கொன்றை அம்பு ஆர் சடையது - கொன்றையாகிய கங்கை நீர் தங்கிய சடையில் உள்ள மாலை. சடையதாகிய கொன்றை என்றும் கூட்டலாம். சிறந்தார் அளித்தார். நம்மருங்கு - நம்மிடத்தில். ஒன்று ஐ அம்பார் - தம்மிடத்திற் பொருந்திய ஐந்து மலரம்புகளை உடைய காமதேவர்.

89. இறைவனிடம் வேதம் பல வகையில் இணைந்து விளங்குவதைச் சொல்வது இப்பாட்டு.

மறை: எழுவாய். வேதம் இறைவனுக்குக் குதிரையாகவும், பாதுகையாகவும், சிலம்பாகவும், கோவணமாகவும், ஆதனமாகவும், கோயிலாகவும், உருவமாகவும், புகழ்பாடுவாராகவும், திருவாக்காகவும் பயன்படும். திரம் - நிலை. பரம் - மேன்மை. வந்தியர் - புகழ்பாடுவார்.

90. திருமாலை விளித்துச் சொன்னது. ஒரு கோடு - சங்கு. இரு கோடு - இரண்டு கொம்பு. ஓசையிலா மணி - கௌத்துவ மணி. அறை மணி - ஒலிக்கும் மணி; கழுத்து மணி. விடம் ஆற்றிடு வால் என்றது, காளியன் என்னும் பாம்பின் வாலை; கண்ணபிரான் அதைப் பிடித்து நடனம் ஆடினான். அமர்வால்; இங்கே வால் என்றது இடபத்தின் வாலை. மா ஆம் பொழுதும் - குதிரையாகிய கற்கி அவதாரம் எடுக்கும் பொழுதும்.

### குறளடி வஞ்சிப்பா

91. நன்றென்பதுந் தீதென்பதும்
ஒன்றும்பவ மென்றுங்கொடு
கொதியாமனர் பதியாவொரு
சிறுநாயினேன் மறுகாவகை
அருள்புரிமதி கருமுகிலுகைத்
தெழுபுனிதனுங் குழுவமரரும்
நறையிதழ்மல ருறைமுனிவனும்
வனமாலிகை புனைதோளனும்
பொறிவலியொருங் கெறியுறுவரும்
சூழ்பாரகம் வாழ்வாரொடு
முடிவறவடைந் தடிதொழுதெழ
நெடுமறைகனி வொடுதுதிசெயச்
சுரும்பார்குழ லரும்பார்முலை
தொடைமார்பகத் திடைமூழ்குற, நாளும்
புண்ணியம் பொலிவாட் போக்கி
விண்ணியன் முடிமேல் வீற்றிருப் போயே.

## கொற்றியார்

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

92. இருப்பொலிநீர் வைப்பானு ரேங்கிடச்சக்
கரஞ்சுழற்ற லென்னை மால்சேர்
தருப்பொலியும் வடமலைதென் மலைகாட்டி
யுடனனந்த சயனங் காட்டின்

---

91. நன்று - புண்ணியம். தீது - பாவம். ஒன்றும் பவம் - இவை பொருந்தும் பிறவிகளை. என்றும் கொடு - எப்பொழுதும் மேற்கொண்டு. கொதி ஆம் அனுர் பதியா - கோபமாகிய துன்பத்தில் பதிந்து. பதியா மறுகா வகை அருள்புரிமதி; மதி: முன்னிலை அசை. புனிதன் - இந்திரன். முனிவன் - பிரமன். வனமாலிகை - துளவமாலை. பொறி வலி ஒருங்கு எரி உறுவரும் - இந்திரியங்களின் வலிமையை ஒருங்கே அழித்த முனிவர்களும். சுரும்பார்குழலின் முலை மூழ்குற.

92. கொற்றியார்-வைணவ வேடம் பூண்ட மகளிர். இருப்பு ஒலிநீர் வைப்பு ஆனுர் - தமக்கு உரிய இருப்பிடம் ஒலிக்கின்ற கடலாக ஆன திருமால், சக்கு அரம் சுழற்றல் என்று பிரித்து, கண்ணாகிய அரத்தைச் சுழற்றுதல் என்றும், சக்கரம் சுழற்றல்

திருப்பொலிமா லடிமையெனு நுமக்கடிமை
யாவறுழாய் செறிம ணித்தார்
குருப்பொலியப் பூண்டுமுடித் தழும்பர்விழாக்
கண்டுவக்குங் கொற்றி யாரே.

### பிச்சியார்

#### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

93. ஆர்கொண்ட முடித்தழும்ப ரருட்பவனி நோக்கி
அணிமறுகிற் சுழன்றுடி யடைபிச்சி யாரே
கூர்கொண்ட விழிநெடுவே லிருக்கவொரு சூலம்
கோடன்மிகை வெண்ணீறுங் கண்மணிமா லிகையும்
வார்கொண்ட செஞ்சடையும் பூங்காவி யுடையும்
மயக்கமறுப் பதுமறந்து மயக்கிடுமா னுமைச்சார்ந்
தேர்கொண்ட விக்கோலங் கொண்டதுமா முனிவர்
இயல்பனைத்துங் கவர்வதற்கோ வியம்புவிர்மற்
றெனக்கே.

---

என்று பிரித்துச் சக்கரமாகிய படையைச் சுழற்றல். என்றும் கொள்க. திருமால் தங்கியிருக்கும் வடமலையாகிய வேங்கடத்தை யும் தென்மலையாகிய சோலைமலையையும் அனந்த சயனத்தையும் காட்டினால் உமக்கு அடிமையாவேன் என்பது தொனிப் பொருள். தருப்பொலியும் வடம் - மரமாகவிளங்கும் ஆலமரத் தின் இலைபோன்ற வயிற்றையும்; அலை தென்மலை - என் உள் ளத்தை அலைக்கும் அழகிய தனத்தையும்; அனந்த சயனம் - இரகசிய உறுப்பையும்; என்று வேறுபொருள்கள் கொள்க. மணித்தார் - அழகிய மாலை.

93. பிச்சியார் - சிவவேடம் பூண்டு ஆடும் பெண். ஆர் - ஆத்தி. விழியாகிய நீண்டவேல். சூலம் கோடல்-கையிற் சூலத் தைக் கொள்ளுதல். மிகை - வேண்டாத காரியம். கண்மணி மாலிகை - உருத்திராக்க மாலை. வெண்ணீறு முதலியன இயல்பாக மன மயக்கத்தை அறச் செய்வன; அவை உம்மைச் சார்ந்தமையால் மயக்கம் அறுக்கும் செயலை மறந்து என்னை மயக்கிடும். ஆல்: அசை. ஏர் - அழகு.

## விறலி

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

94. என்னை மேவுறு மிறையவன் றலையளி யென்னிடம் புகழாயேல், முன்னை யாலவா யிடத்துவாட் போக்கியார் முதிரருளால்வென்ற, பொன்னை நேரென வுள்ளுவல் விறலிநீ புகழ்வையே லிசைதோற்றுப், பின்னை மற்றவட் சுமந்தவ ணேரெனப் பெரிதுமெள் ளுவலோரே.

## நாரைவிடு தூது

### கொச்சகக் கலிப்பா

95. ஓராய் கடுமொழியு மோரா யனங்கர்முனிந்
தாரா யெழவுறுநோ யாராயாய் திங்கள்சுடல்
பாராயா னந்தமுவப் பாராய் முடித்தழும்பர்
தாராய் மடநாராய் தாராயுண் ணாராயே.

---

94. வாயிலாக வந்த விறலியைத் தோழி மறுத்தது விறலி - பாட்டுப்பாடும் பாணன் மனைவி.

இறையவன் - தலைவன். தலையளி - சிறந்த அன்பு. தலைவன் சிறந்த அன்புடையவன் என்று விறலி கூறுகிறாள். அவ்வாறு சொல்ல வேண்டாமென்று தலைவி சொல்லுகிறாள். முன்னை - முன்காலத்து. ஆலவாயிடத்து - மதுரை மாநகரில். வாட்போக்கியாரென்றது பொதுவாகச் சிவபெருமான் என்ற பொருளில் வந்தது. வென்ற பொன் - பாணபத்திரனுடைய மனைவி. அவள் சுமந்தவள் - அந்தப் பாணபத்திரன் மனைவியைச் சுமந்த ஈழத்து விறலி. நேர் - ஒப்பு. எள்ளுவல் - இகழ்வேன். ஓர் - இதை எண்ணிப் பார்.

95. தலைவி நாரையைப் பார்த்துக் கூறுகிறாள்.

ஓர் ஆய் - நற்றாய். ஓராய் - நீ சிந்திப்பாய். அனங்கர் - காமதேவர். முனிந்தாராய் எழ - கோபமுள்ளவராகிப் போர் செய்ய எழுவதனால். ஆராயாய் - எண்ணிப் பார்ப்பாயாக. திங்கள் சுடல் - சந்திரன் வெதுப்புதலை. ஆனந்தம் உவப்பார் ஆய் - பேரின்பத்தை விரும்புபவர்கள் தியானம் பண்ணுகிற. முடித்தழும்பர் தார் - முடித்தழும்பர் அணிந்த மாலையை. ஆய் மட நாராய் - நான் தேடுகின்ற இளமையையுடைய நாரையே. உள் நாராய் தாராய் - உள்ளன்போடு வாங்கிக் கொண்டு வந்து தருவாயாக. நாராய் தார் தாராய் என்க.

### நேரிசை வெண்பா

96. ஆயும்வாட் போக்கி யரன்முடிமே லாரியன்கூர்
தோயும்வாட் போக்கியநாட் டோன்றும்வடு-ஆயிடைவாழ்
மங்கையடை யாணீர் வடிவமொழித் தாலடையும்
சங்கையடை யாவாறு தான்.

### கட்டளைக் கலித்துறை

97. தானே தனக்கொத்த வாட்போக்கி நாத சடாமுடிமேல்
மீனேய வெள்ளல ரோடுவைத் தாய்மன வெண்கலையை
ஊனேய பல்லுயிர் சூழடிக் காரல ரோடுநறும்
கானே யுறவைத்தி யென்றீ யமனக் கருங்கலையே.

### கலிநிலைத்துறை

98. கலந்த காதவென் பாக்கிவாட் போக்கியைக் கரும்பு
கலந்த காமர்சொல் லோடுகண் டினிதுப கரும்பு
கலந்த காரமே வாதுதீ வினைகட கரும்பு
கலந்த காவென லாமன மாமயற் கரும்பு.

---

96. கூர் தோயும் வாளைப் போக்கிய நாள். ஆயிடை-அந்தத் திருமுடியில். மங்கை - கங்கை. ஆரிய அரசன் வெட்டிய வெட்டின் வடு நீரிற் படியாதாதலின் அதை அடையாள் என்றார். நீர் வடிவம் ஒழித்தால் சங்கை அடையாவாறு தான் அடையும்-தண்ணீர் வடிவத்தை நீத்துப் பெண்ணுருவம் கொண்டாளென்றால் சந்தேகம் அடையாதபடி அவள் வடுவைப் பெற்றிருப்பாள்.

97. மீன் ஏய - வான்மீனை ஒக்க. வெள்ளலர் - கொக்கிறகு, ஆத்தி, எருக்கு முதலிய வெண்மலர்கள். வெண்கலையை மன்ன வைத்தாய் - வெண்மையான கலைகளையுடைய சந்திரனைத் தங்கும் படி வைத்தாய். வெண்கலை: அன்மொழித் தொகை. ஊன் - உடம்பு. சூழ்-வலம் வரும். அடிக்கு ஆர் அலரோடு- திருவடியிற் பொருந்திய மலர்களோடு. கான் உற-மணம் பொருந்த. வைத்தி-வைப்பாயாக. மனக்கருங்கலை - மனமாகிய கருங்கல்லை. முடிமேல் வெள்ளலரோடு மன வெண்கலையை வைத்ததுபோல அடியில் மனக் கருங்கலையை வைப்பாயாக என்று முரண் தொனிக்கச் சொன்னார்.

98. தகாத என்பு கலம் ஆக்கி - பூணத்தகாத எலும்புகளை ஆபரணம் ஆக்கியவன்; வினையாலணையும் பெயர். வாட்போக்கி : இறைவர் திருநாமம். கரும்பு கலந்த காமர் சொல் - கரும்பின்

### கட்டளைக் கலித்துறை

99. புரிதரு மாணிக்க வெற்பார் வதனம் பொலிவிழியுட்
பரிதரு மொன்று மறைந்து சுடும்வெளிப் பட்டுச்சுடும்
விரிதரு மொன்றிவை தீர்சுடு கண்ணொடு வேற்றுமையென்
எரிதரு செந்தழ லேமேனி யார்கண் ணியல்புமதே.

### நேரிசை வெண்பா

100. அதரஞ் சிவந்தா ளயலான்பின் சென்றாள்
அதரஞ் சிவந்தா ளிலளால் - உதரம்
அடித்தழும்பா விக்கா மனன்மீட் டருள்வாய்
முடித்தழும்பா விக்கா முனம்.

---

இனிமை கலந்த அழகிய சொல்லை உடைய அம்பிகை. இனிது பகரும் - இனிய துதியைச் சொல்லுங்கள். புகல் அந்தகாரம் மேவாது - தீயதென்று சொல்லும் அறியாமை சாராது; அந்த காரம் - இருள்; என்றது அறியாமையை. வினைகள் தகரும். அந்தகா புகல் எனலாம் - யமனே எங்கள்பால் வாராதே என்று சொல்லலாம். மனம் அயற்கு அரும்பு ஆம் - உங்களுடைய மனம் இறைவனுக்குச் சாத்தும் அரும்பு போலக் குவியும். அயன் : ஐயன் என்பதன் போலி.

99. தலைவி கூற்று.

புரிதரு - விரும்புகின்ற. பரிதரும் ஒன்று - உலாவுகின்ற சந்திரனாகிய ஒரு கண். மறைந்து சுடும் என்றது, பிறரைச் சுடாமல் தன்னை மாத்திரம் சுடுவதை எண்ணிச் சொன்னது. விரிதரும் ஒன்று - சூரியன். அது வெளிப்படையாகவே சுடும் இவை தீர் சுடுகண்ணொடு வேற்றுமை என் - இவற்றினின்றும் வேறாகிய சுடுகின்ற நெருப்புக் கண்ணாகிய நெற்றிக் கண்ணோடு இவற்றுக்குள்ள வேறுபாடு என்ன. எல்லாக் கண்களும் சுடு கின்றன. நெருப்பே திருமேனியாக உள்ளவனுடைய கண்ணின் இயல்பு அந்த நெருப்பைப் போன்றதே என்றாள்.

100. நற்றாய் சுரந்தணிவித்தல். தலைவி செல்லும் பாலை நிலம் சுடாமல் குளிர்ந்து இருக்கவேண்டும் என்று நற்றாய் வேண்டுகிறாள்.

அதரம் சிவந்தாள் - வாயிதழ் சிவப்பாகவுள்ள என் மகள். அதர் அஞ்சி வந்தாள் அலள் - செல்லும் வழியின் கொடுமைக்குப் பயந்து திரும்பி வரவில்லை. ஆல்: அசை. உதரம் அடித்து அழும்

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

101. முன்னியயா வுந்தருவாட் போக்கிநா
யகவடியேன் மொழிந்த பாடல்
மன்னியகுற் றமுங்குணமாக் கொண்டுமகிழ்ந்
தருள்புரிதி மறுப்பா யென்னின்
துன்னியவூ ரினும்விரைசார்ந் தறியாத
புல்லெருக்குஞ் சூடிக் கொண்டாய்
மன்னியமற் றதன்குணமென் னெனின்விடைநீ
கொடுக்குமா வருங்கண் டாயே.

### நேரிசை வெண்பா

102. ஏற்றர்வாட் போக்கி யிராசலிங்கர் கூற்றினுக்கோர்
கூற்றர் சுரும்பார் குழல்பாகர் - நீற்றரெமை
நன்ருடல் கண்டோ நயவாமை வேண்டியவர்
மன்ருடல் கண்டோமம் மா.

---

பாவிக்கு - அவள் பிரிவால் வருந்தி வயிற்றில் அடித்துக்கொண்டு அழும் பாவியாகிய என்பொருட்டு. ஆம் அனல் மீட்டும் அருள்வாய் - வழியில் உள்ள வெம்மையைப் போக்கி அருள்வாயாக. விக்காமுனம் - வெம்மையால் விக்குவதற்குமுன். விக்காமுனம் மீட்டருள்வாய்.

101. அடியேன் மொழிந்த பாடலில் உள்ள குற்றங்களையும் குணமாகக் கொண்டு திருவுள்ளம் உவந்து அருள்புரிவாயாக. அவ்வாறு செய்ய மறுப்பாயானுல், தான் இருக்கும் ஊரிலும் மணம் பொருந்தி யறியாத எருக்க மலரைச் சூடிக் கொண்டாய், அதனிடம் உள்ள குணம் என்ன என்று கேட்டால் அதற்குரிய விடை அளிக்கும்படியான சங்கடம் உனக்கு வரும் என்கிருர். மணமில்லாத எருக்கைச் சூடிக்கொண்டதுபோல, குணமில்லாத என் பாடலையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது கருத்து.

முன்னிய அடியார்கள் நினைத்த. விரை - நறுமணம். புல் எருக்கு - பொலிவற்ற எருக்கு மலர். கொடுக்குமா - கொடுக்குமாறு.

102. ஏற்றர் - இடப வாகனத்தை உடையவர். நன்று ஆள்தல் - நன்ருக ஆளுதலையும். கண் தோம் நயவாமை - கண்கள் குற்றங்களை விரும்பிப் பாராமையையும். வேண்டி-விரும்பி. ஆடலையும் நயவாமையையும் விரும்பி. மன்று ஆடல் - அம்பலத்தில் நடனம் செய்தலை. அம்மா: அசை.

வாட்போக்கிக்கலம்பகம் முற்றிற்று.

# செய்யுண் முதற்குறிப்பகாரதி

(எண்—செய்யுள் எண்)


| | | | |
|---|---|---|---|
| அடரும்வன | 52 | ஓதுமறை | 26 |
| அடிபடுமால் | 18 | ஓதுவனப் | 33 |
| அடியுற்ற | 10 | ஓராய் | 95 |
| அடையுமாலை | 67 | ஓராழி | 42 |
| அதரஞ் | 100 | கதிகாண் | 65 |
| அருள்செறிமா | 70 | கருதுங் | 50 |
| அரைவிராவ | 49 | கருப்பங் | 23 |
| அறவர்புகழ் | 74 | கலந்த | 98 |
| அறவிடையார் | 81 | காணரிய | 76 |
| அறிதரும் | 48 | காலங்கழியு | 30 |
| அறியாதவமே | 34 | குறிபடுபன் | 41 |
| அன்றுமது | 54 | குறையின் | 17 |
| அன்றுவரு | 7 | குன்றுத | 31 |
| ஆயும்வாட் | 96 | கோடுபொலி | 37 |
| ஆயுமிதழ் | 44 | சங்கவாய் | 19 |
| ஆயுமிவை | 47 | சிதைக்கலமே | 46 |
| ஆர்கொண்டசெஞ் | 45 | சொல்லார்புவி | 2 |
| ஆர்கொண்டமுடி | 93 | தழுவுமையான் | 9 |
| ஆரப்பா | 55 | தானே | 97 |
| ஆரவாவு | 79 | துதிக்கும் | 59 |
| ஆவாவடியே | 80 | நன்றகமகிழ் | 71 |
| ஆவேறு | 83 | நன்றென்பது | 91 |
| ஆளாகவந்த | 69 | நாகமே | 20 |
| ஆனவனு | 63 | நீர்கொண்ட | 40 |
| இடம்படு | 32 | நோக்குறுமா | 58 |
| இருப்பொலி | 92 | படர்பாதலம் | 5 |
| இறைவர்திரு | 6 | படவாளரவ | 36 |
| இன்பரா | 78 | பார்வளர் | 38 |
| இன்றுபைங்கிளி | 28 | பாராய்வாட் | 25 |
| உண்ணுநஞ்சமு | 56 | புகலரும் | 13 |
| உரைதருகா | 14 | புயறவழ | 12 |
| உற்றவொளி | 66 | புரிதருஞ்சடை | 8 |
| உறவே | 88 | புரிதருமாணிக்க | 99 |
| ஊசலாடு | 60 | பெண்பால் | 75 |
| எம்மாதவரும் | 15 | பெயராத | 51 |
| என்னைமேவுறு | 94 | பேசுமா | 82 |
| எனக்கரிய | 22 | மகளேமால் | 21 |
| ஏதமில்வாட் | 72 | மங்கையொரு | 61 |
| ஏற்றர்வாட் | 102 | மலையாவருட் | 35 |
| ஏறெனவிப் | 43 | மலையானில | 27 |
| ஒக்கவனைத்து | 39 | மறைபுகலும் | 90 |

மனனமர் 87
மாமேவுசெங் 3
மாமேவுவாட் 53
மாலாய 62
மாலேமுடித் 85
மான்கொண்ட 16
மின்னுமற 29
முக்கணொருத்தன் 1
முடித்தழும்பர் 77
முதுமறையுணர்ந்து 11
முன்னியயா 101
மேதகவுரி 24
மேவலார் 68
மேவார் 86
வரந்தரு 89
வாயாது 64
விரைகமழ் 4
விள்ளும்படி 73
வெம்மையொடு 57
வேலேவாய் 84

## பிழையும் திருத்தமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 13 | முக்கண் ஒருத்தன் | முக்கண் ஒருத்தல் |
| ,, | 15 | கட்டுத்தறி | கட்டுமிடம் |
| ,, | 22 | பெருவெள்ளம் | வெள்ளமதம் |
| 3 | 9 | புறந்திருக்க | புறத்திருக்க |
| 4 | 23 | பனிரெண் | பன்னிரண் |
| 5 | 34 | அணிந்து | அணிந்தது |
| 6 | 19 | பிரணவம் என்பார்-நீர். | பிரணவம். என்பார்நீர். |
| 7 | 22 | வராகவதாரம் | வராகாவதாரம் |
| ,, | 28 | நீங்கினுய் | நீக்கினுய் |
| 9 | 15-16 | வருமயிலேம் அன்று | வருமயிலே மன்று |
| 10 | 14 | சந்திரம் | சந்திரன் |
| 12 | 28 | மணிவளையம் | மணிவலயம் |
| 14 | 19 | இறை | விரை |
| ,, | 36 | பனிரெண் | பன்னிரண் |
| 15 | 23 | குறைகுறைதானே | குறைதானே |
| ,, | 30 | அமர்ந்திருப்பவன் | அமர்ந்திருப்பவள் |
| 16 | 25 | கரும்புள் சங்க மேகரிய-பறவை | கரும்புள் சங்கமே-கரிய பறவை, |
| ,, | 30 | கூற்றம்-முன்காலத்தில் | கூற்றம்-சங்கத்தில் முன்காலத்தில் |
| 17 | 29 | நீறு இறை | நீறு விரை |
| ,, | 31 | அஞ்சா ஒரு | அஞ்சா நகு |
| 18 | 17 | கணக்கரிய | கனக்கரிய |
| 18 | 21 | இலக்குயாது- | இலக்குயாது; இலக்கு- |
| ,, | 33-4 | இறைவன் திருமால் | திருமால் |
| 19 | 27 | அடைவார் | அளைவார் |
| ,, | 32 | எற்பு ஆரும் | எற்பார் |
| 21 | 20 | ஆத்துவித | அத்துவித |
| 23 | 17 | வணங்குகின்ற அன்பர்களில் | வணங்குகின்ற; அன்பர்களின் |
| ,, | 31 | இடம்-வாட்போக்கி | இடம் வாட்போக்கி, |
| 24 | 24 | சித்தர் என்கிறுர் | சித்தர் என்பேன் என்கிறுர் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 24 | 27 | கொம்பைச் சிவபெருமான்.........வந்து | கொம்பை. சிவபெருமான் வராகாவதாரத்தின் |
| 25 | 16 | நாத்தலையார் | நால்தலையார் |
| 26 | 10 | முடிக்கொன்றை | முடிக்கொன்ற |
| 28 | 4 | சிறுகுரையு | சிறுகுறையு |
| ,, | 13 | வழக்குரைத்தார் | வழக்குரைத்தீர் |
| ,, | 20 | பனிரெண் | பன்னிரண் |
| ,, | 23 | ,, | ,, |
| ,, | 30 | எம்பெருமான் | நேராக எம்மான் |
| 29 | 23 | கைம்மா | கைம்மான் |
| ,, | 26 | பெண்ணை | பொன்னை |
| ,, | 28 | கைம்மா | கைம்மான் |
| ,, | 30 | உள்ளமா | உள்ள மான் |
| ,, | 33 | மடை | மடல் |
| 29 | 35 | முகிழ்கின்ற | படுகின்ற |
| 30 | 32 | காகஸ்வரம் | காகுஸ்வரம் |
| ,, | 36 | உரிமை | பொறுமை |
| 31 | 17-8 | கப்பலலாக | கப்பிலாக உள்ள |
| ,, | 21 | முடியால் | முடியாய் |
| ,, | 23 | முடியார் | முடியாய் |
| ,, | 33 | அண்டகோளங்கள்-முட்டை | அண்டங்கள்-அண்டகோளங்கள், முட்டை |
| ,, | 34 | குவலயம், பூமி, குவளை | குவலயம்-பூமி, குவளை |
| 32 | 8 | கரனதர | கரனரத |

TAMIL NADU ARCHIVES LIBRARY
EGMORE, MADRAS-600 008
4678

4B / 9.56